சர்வதேச கூட்டுறவாளர்

# தின விழா மலர்

HY VIJAYAGAR
EARLALAI WEST
CHUNNAKAM
LIBRARY




1976

சுன்னாகம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்

## உள்ளூர் உற்பத்தியில் நிறைவு காண்போம்

எம்மிடம் கீழ்க்காணும் பொருட்கள் நியாயமான விலையில் பெற்றுக் கொள்ளலாம்.

* பனஞ்சீனி, பனம்பாணி, பனங்கட்டி
* சீமெந்துக் காகிதப் பைகள்
* வர்த்தகக் காகிதப் பைகள்
* கடிதக்கோவைகள், என்வலப் வகைகள்
* அப்பியாசப் புத்தகங்கள்
* மொனிற்றேஸ் அப்பியாசப் புத்தகங்கள்
* சீ. ஆர் புத்தகங்கள்

உடுவில் தொகுதி
அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்
சண்டிலிப்பாய்

TA-12

SRI VINAYAGAR
EARLALAI WEST
CHUNNAKAM
LIBRARY

சுன்னுகம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின்
சர்வதேச

# கூட்டுறவாளர் தின விழா மலர்

1976

வெளியீடு:
சுன்னுகம் ப. நோ. கூ. சங்கம்

அச்சுப்பதிப்பு:
விநாயகர் பிறின்டிங் வேக்ஸ் சப்ளையர், ஏழாலை.

*With Best Compliments*

**SAMUEL, SONS & COMPANY LIMITED**

87 OLD MOOR STREET P O BOX 46 COLOMBO 12 PHONE 32341 (4 Lines)



# V. K. Suppiah Chettiar & Bros

GUNNY & GENERAL MERCHANTS

**K. K. S. Road — JAFFNA**

**T' Phone: 849**

வா. க. சுப்பையா செட்டியார் அன் பிறதர்ஸ்

380, கே. கே. எஸ். றேட் — யாழ்ப்பாணம்

இலங்கை எங்கும் புகழ்பெற்றது

எல்லோரும் விரும்புவது

எங்கும் கிடைக்கக் கூடியது

ஈஸ்வரி வேட்டிகள்

,, சேலைகள்

,, சாரம்

,, படுக்கை விரிப்புக்கள்

மற்றும் பல விதமான புடவைகளும், கேட்ஸ் மாதர்களின் மார்புக் கச்சைகளும் மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

# நாதன் அன் கோ

*102/3 1ம் மாடி,*

3ம் குறுக்குத்தெரு — கொழும்பு 11

கிளை ஸ்தாபனம்:

வெங்கடேஸ்வர,

இல: 25, நவீனசந்தை மேல்மாடி — யாழ்ப்பாணம்

வானாகி மண்ணாகி
வளியாகி ஒளியாகி
ஊனாகி உயிராகி
உண்மையுமாய் இன்மையுமாய்க்
கோனாகி யானென தென்(று)
அவரவரைக் கூத்தாட்டு
வானாகி நின்றாயை
என்சொல்லி வாழ்த்துவனே!

—மாணிக்கவாசகர்

# மாண்புமிகு அமைச்சரின் வாழ்த்து

சர்வதேச கூட்டுறவாளர் தினவிழாவைக் கொண்டாடுகின்ற சுன்னுகம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினர், இதையொட்டி ஒரு மலரையும் வெளியிடுவது கண்டு மகிழ்ச்சி அடைகிறேன்.

கூட்டுறவு இயக்கத்தின் மூலமாக இப்பகுதி தொழிலாள, விவசாய, பாட்டாளி மக்களது வாழ்க்கைத் தரத்தினை உயர்த்துவதற்கு அயராது உழைத்துவரும் சுன்னுகம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர் அவர்கட்கும், ஏனையோருக்கும் எனது பாராட்டுகள்.

இவ் விழா சிறப்புடன் அமைய எனது வாழ்த்துக்கள்

செ. குமாரசூரியர்
அஞ்சல் தொலைத்தொடர்புகள் அமைச்சர்

## *Message*


The Chunnakam M. P. C. S. Plays a dynamic role in the servicing of people of Vali - South Division. As it covers a prosperous agricultural area in the District, it has a great potential for handling development services

Chunnakam is the principal town of the Vali-South Division and is famous for its largest fair in the District. The majority of the people, have to seek the assistance of this Co-operative to obtain the various agricultural inputs besides, obtaining their consumer goods as well.

This M. P. C. S. has naturally expanded its activities recently to cover local industry, and through such entreprise generate employment for the youths of the area.

Whilst I take this opportunity of sending this message to the Souvenir, published to mark the International Cooperator's Day, I deem it my pleasant duty to wish this M. P. C. S. another year of service to the community.

**M. A. L. Wijayapala**
GOVERNMENT AGENT, JAFFNA DISTRICT



# வாழ்த்துச் செய்தி

54 வது சர்வதேச கூட்டுறவு தின விழாவை முன்னிட்டு சுன்னுகம் ப. நோ. கூ. சங்கம் வெளியிடும் இம் மலருக்கு வாழ்த்துச் செய்தியை அனுப்பி வைப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன்.


இவ்விழாவினது நோக்கம் கூட்டுறவுக் கொள்கைகளை மக்களிடையே பரப்புவதும் கூட்டுறவு அடிப்படையில் அமைந்த பொருளாதார வாழ்வு பற்றிய எண்ணத்தை மக்கள் மனதில் வேரூன்றச் செய்வதுமேயாகும்.

கூட்டுறவுத் துறையில் குறிப்பிடக்கூடிய சாதனைகளை நிறைவேற்றிவரும் முன்னணியில் உள்ள சங்கங்களில் ஒன்றான உங்கள் சங்கம் இத்தகைய விழாவைக் கொண்டாடுதல் மிகவும் பொருத்தமானதே.

உங்கள் முயற்சிகள் வெற்றிபெற வாழ்த்துகிறேன்.

க. சண்முகலிங்கம்

கூட்டுறவு ஆக்க உதவி ஆணையாளர்



# எமது தலைவரின் ஆசி

எமது சங்கம் 1971ம் ஆண்டு புனரமைப்பின் பின்பு இப்பகுதியிலுள்ள கூட்டுறவாளர்களையும், உறுப்பினர்களையும், பணியாளர்களையும், பொதுத்தாபனங்களையும் கொண்டு இக்கூட்டுறவாளர் தினவிழா கொண்டாடுகின்றோம்.

இவ்விழாவில் பொதுமக்கள் பங்குகொள்கின்ற முறைகள் உருவாக்கப்பட்டு, கடந்தகாலங்களில் இவை பரீட்சார்த்தமாக நடாத்தப்பட்டு, பெறுபேறுகளாக கிராமிய பொருளாதாரம் ஓரளவிற்கு வளர்ந்ததை அனுபவரீதியாகக் கண்டிருக்கிறோம். இவ் ஸ்தாபனங்களின் முழு நிர்வாகமும் பொது மக்களுக்கும், பணியாளர்களுக்கும் கையளிக்கப்படவேண்டிய அதேநேரத்தில் தனியார் துறையினரும், உத்தரவு பெற்ற வியாபாரியினரும் முழுமையாக கூட்டுறவுத் துறையின் கீழோ அல்லது பொதுத்துறையின் கீழோ கொண்டு வரப்படவேண்டியது அவசியமாகும். மக்களின் நாளாந்த வாழ்க்கைக்குத் தேவையான நுகர்ச்சி மட்டுமன்றி இன்னோரன்ன தேவைகளைக் கூட்டுறவு இயக்கம் பூர்த்தி செய்வதோடு, வைத்தியசாலைகள், மருந்துச் சாலைகள் போன்ற அத்தியாவசிய தேவைகளையும் பொறுப்பேற்பதோடு மட்டுமல்லாமல், மொழி, கலை கலாச்சாரம் ஆகிய துறைகளின் வளர்ச்சியிலும் கூடிய பங்குகொள்வதன் மூலமே "பல நோக்கங்களையும், இலக்குகளையும்" ஈடேற்றுவதாக அமையும். இத்திசையில் மேலும் உறுதியுடன் செயல்பட உழைப்போமாக.

எமது விழாவின் வெற்றிக்கு சகல துறையிலும் உழைத்த அனைவருக்கும் எனது நன்றி!

குமாரசாமி விநோதன்

26-8-76 [தலைவர்]

# கிராமியப் பொருளாதாரத்தில் கிராமிய வங்கிகளின் பங்கு

திரு. ச. அரியரராசா
(கடன் பகுதி முகாமையாளர்)




இலங்கையின் பொருளாதாரம் விவசாயத்தில் தான் தங்கியுள்ளது, என்பதை உணர்ந்து கிராமம் தோறும் விவசாய உற்பத்திச் சங்கம், கூட்டுறவுப் பண்டகசாலைச் சங்கங்களையும், ஐக்கிய நாணயச் சங்கங்களையும் உருவாக்கினுர்கள். இதனுல் மக்களிடையே கூட்டுறவு வளர்ச்சி அடையத் தொடங்கியது. இவ்வியக்கங்களை அரசாங்கம் மக்களிடையே பரப்ப சகல விதமான உதவிகளையும் செய்துள்ளது.

1958-ம் ஆண்டு இச்சங்கங்களை சீர் திருத்தும் நோக்கத்துடனும், மக்கள் தங்கள் தேவைகளை ஒரே இடத்தில் பெறுவதற்கு வசதியாக பல. நோ. கூ. சங்கத்தை அறிமுகப்படுத்தியுள்ளார்கள். மேலும், இவற்றில் சேவைகளை விஸ்தரிப்பதற்காக 1971-ம் ஆண்டு சங்கங்களை புனரமைப்புச் செய்யப்பட்டன. இச்சங்கங்கள் கிராமிய பொருளாதாரத்தில் ஒரு சிறு பகுதியைத்தான் வகிக்கிறது. இப்பொழுது இக்கூட்டுறவுச் சங்கங்கள் எல்லாம் ஒவ்வொரு கிராமிய வங்கிகளை ஆரம்பித்துள்ளது. ஆனுல் இவ்வங்கிகளை நல்ல முறையில் நடாத்துவதற்கு பல முட்டுக் கட்டைகள் உள்ளன.

கிராமிய வங்கிகள் கிராமத்தில் உள்ள விவசாயிகளை கடன் தொல்லைகளில் இருந்து மீட்கவும், அவர்களுக்குத் தேவையான கடன் வசதிகளைச் செய்து கொடுக்கவும் இவ்வங்கிகள் மூலம் சந்தைப்படுத்தல் செய்யவும் உருவாக்கப்பட்டது. ஆனுல் இதில் ஒரு பகுதியைத் தன்னும் இவ்வங்கி செய்ய முடியாத நிலையில் இவ்வமைப்பு உள்ளது. இதனைச் சீர்திருத்துவதற்கு அரசாங்கம் முயற்சி எடுத்தல் அவசியம். முன்னைய ஐக்கிய நாணய சங்கங்கள் வளர்ச்சியடைந்த அளவுக்கு கிராமிய வங்கி வளர்ச்சியடையவில்லை.

நமது நாடு அபிவிருத்தியடைந்து வரும் நாடாகையினுல் சில பிரச்சனைகளை எதிர்நோக்க வேண்டியுள்ளது. அபிவிருத்தியை ஏற்படுத்துவதற்கு தேவையான முதலீடு, சேமிப்பு இன்மையால் பாதிக்கப்படுகின்றது. பெருகி வரும் சனத்தொகை நாட்டின் வருவாயைக் குறைத்து வருகின்றது. இப்பிரச்சனையைத் தீர்ப்பதற்கு கூட்டுறவுக் கிராமிய வங்கிகள் சிறந்தது எனக் கருதி அரசாங்கம் இவற்றை உருவாக்கியுள்ளது.

இவ்வங்கிகளைக் கிராமப்புறத்தில்தான் உருவாக்கின் மிகவும் நல்லது. இப்பொழுது பட்டினங்களிலும் இவ்வங்கிகள் உருவாக்கப்பட்டுள்ளது. வங்கித் தொழில் பட்டினங்களில்தான் வளர்ச்சியடைந்துள்ளது. இதனுல் கிராமிய மக்களை உன்னத நிலைக்குக் கொண்டுவர முடியாது.

இலங்கையில் மக்கள் வங்கி, கிராமிய வங்கியை உருவாக்கிய நோக்கம் மக்கள் வங்கியுடன் கிராமிய வங்கி கிராமிய பொருளாதாரத்தை பெருக்கு வதற்கேயாகும். ஆனால் இது நடைமுறையில் இதுவரை சாத்தியமாகப்படவில்லை.

கிராமிய வங்கிகள், மக்கள் வங்கி செய்யும் தொழிலை கிராமத்திலும் செய் வதற்கு வழிவகைகள் செய்தல் மிகவும் அவசியம். அத்துடன் மக்கள் வங்கியில் சரியான கட்டுப்பாடுகள் கிராமிய வங்கியில் இருத்தல் கூடாது. கிராம மக்கள் தங்களுக்குத் தேவையான பணத்தைப் பெறுவதற்கு இலகுவான முறையில் இதன் நடைமுறைகள் மாற்றியமைக்கப்படல் வேண்டும்.

ஒரு எழுத்தறிவில்லாத விவசாயி ஐக்கிய நாணய சங்கத்தில் எப்படிக் கடன் எடுத்தானோ அப்படியான முறையில் கிராமிய வங்கிகளிலும் தானாக விரும்பிக் கடன் எடுக்க வசதிகள் செய்யப்படல் வேண்டும்.

இப்பொழுது இருக்கும் நிலையில் அநேக விவசாயிகள் வங்கிகளிலோ, சங் கங்களிலோ கடன் எடுப்பதற்கு மிகவும் சிரமப்படுகின்றார்கள். இந்நிலை மாற வேண்டும். தன்தேவைக்கு உடனடியாக எடுக்கக் கூடிய முறையில் கிராமிய வங்கிகளில் வசதிகள் அமைக்கப்படல் வேண்டும்.

இப்பொழுது இருக்கும் நிலையில் கிராமிய வங்கிகளில் கடன் பெறுவதாகில் ஒரு விவசாயி பின்வரும் கஷ்டங்களை அனுபவிக்கின்றான்.

> விண்ணப்பத்துடன் தனக்குத் தேவையான மொத்தக் கடன் எல்லையை யும், தனது பொருளாதாரக் கூற்றையும் நிரப்பிக் கொடுத்தல் வேண்டும். இவ்விண்ணப்பம் சங்கத்தின் கிளைக்குழுவினால் பரிசீலிக்கப்பட்டு அவர் களுடைய சிபார்சுடன் கிராமிய வங்கிகளுக்கு அனுப்பப்படும். அத்துடன் விவசாய விஸ்தரிப்பு உத்தியோகத்தரின் சிபார்சும் தேவையாக உள்ளது. பின்னர் கிராமிய வங்கிக் கடன்குழு, மக்கள் வங்கி உத்தியோகத்தர் ஆகி யோர் சிபார்சுடன் இயக்குனர் சபை தீர்மானித்து பின்பு கூட்டுறவுப் பரிசோதகரின் கூட்டுறவு ஆணையாளரின் சிபார்சுடன் மக்கள் வங்கிக்கு அனுப்புதல் வேண்டும். பின்பு தான் அவர்கள் கடனை அனுமதிப்பார்கள். இதற்கு குறைந்தது 2 மாத காலம் தேவைப்படும். இதற்குள் விவசாயி களின் தேவை முடிவடைந்துவிடும். அல்லது போக காலம் முடிவடைந்து விடும். இந்நிலை மாறவேண்டும். விவசாயி தனக்கு தேவையான கடனைப் பெறுவதற்கு மிகவும் இலகுவான முறையில் இவ்வங்கித் திட்டம் மாற்றி யமைக்க வேண்டும்.

மக்கள் வங்கி, இலங்கை வங்கி போன்ற பிற வங்கிகள் கடன் வழங்கும் முறையை இவ்வங்கிக்கும் நடைமுறைப்படுத்தல் வேண்டும். மக்கள் வங்கியில் கடன் எடுப்பதாகில் இரண்டு பிணையாளர்கள் வருமானவரி கட்டுபவர்கள் கையொப்பம் இட்டே பின்னர் உடன் தருவார்கள். இலங்கை வங்கி இரண்டு வாடிக்கையாளர்கள் அல்லது கமக்காரர் அடையாள அட்டை உடையவர் விவ சாயப் போதனாசிரியரின் சிபார்சுடன் கடன் வழங்கப்படுகின்றது. இம்முறை யையே கிராமிய வங்கிகளிலும் நடைமுறைப்படுத்தல் வேண்டும்.

கிராமிய மக்களின் விவசாயம், சிறு கைத்தொழில்கள் (சுருட்டுத் தொழில், தச்சுத் தொழில், சிறு உற்பத்தி விற்பனை நிலையங்கள் போன்றன) வீட்டுப் பண்ணைகள், மீன்பிடித்தொழில், நுகர்ச்சிக் கடன், வீடு கட்டுதல், மின் இணைப்பு, கடன் மீளல் போன்றவற்றுக்கு கொடுக்கக் கூடியதாகவும், சுகயீனம் மற்றும் துக்ககரமான வைபவங்களுக்கும், அவசரகாலக் கடனாகவும் வழங்க மக்கள் வங்கி திட்டங்களை வகுத்து இருக்கின்றது.

கிராமத்தில் உள்ள மக்கள் தங்களின் உழைப்பில் ஒரு பகுதியை சேமித்து வைக்கவும், அச்சேமிப்புக்கு ஏற்றவாறு கடன் வழங்கவும், தொழில் இல்லாதவர்களுக்கு அவர்களுக்கு ஏற்றவாறு சிறு கைத்தொழில்களுக்கு ஊக்கமளிக்கவும், சிறு குடிசைகள் கட்டுவதற்கும், சிறு கடன்களைத் தீர்த்து மக்களை கடன் சுமையில் இருந்து விடுவிக்கவும் ஏற்பாடுகள் செய்தல் அவசியம். இவற்றுக்கு மக்கள் வங்கியால் நடைமுறைப்படுத்தப்பட்ட திட்டங்கள் இருந்தும் கிராமிய வங்கியால் நடைமுறைப்படுத்த முடியாமல் இருக்கின்றது. இதனை நடைமுறைப்படுத்த மக்கள் வங்கி கிராமப் புறத்து வங்கிகளுக்கு புத்துயிர் அளிக்கப்படல் வேண்டும்.

மேலும் கிராமிய வங்கிகள் மூலம் கிராமத்தில் உள்ள வசதி குறைந்த மாணவர்களுக்கு உயர் கல்வி கற்பதற்கு பணவசதிகள் செய்து கொடுப்பது அவசியம். இதற்கான திட்டங்களையும் நடைமுறைப்படுத்தினால் கிராமவாசிகள் படிப்பு அறிவுள்ளவர்களாக உயர்த்தினால் பொருளாதாரத்தில் முக்கிய கவனம் செலுத்துவார்கள்.

மேலும் கிராமிய மட்டத்தில் வங்கிகளின் சேவையைப் பலப்படுத்தினால், கிராமியப் பொருளாதாரம் மிகவும் உன்னத நிலையை அடைவதுடன் மக்களை மறுமலர்ச்சி அடையவும் செய்யலாம் என்பதில் ஐயம் இல்லை.

---

# எமது சங்க இயக்குனர் சபை உறுப்பினர்கள்

(1) தலைவர் திரு. குமாரசாமி விநோதன்
(2) இயக்குனர் திரு. க. பொன்னம்பலம்
(3) ,, ,, ச. சத்தியமூர்த்தி
(4) ,, ,, சி. குமாரவேலு, ஜே. பி.
(5) ,, ,, செ. துரைசிங்கம்
(6) ,, ,, க. விசுவலிங்கம்
(7) ,, ,, சி. செல்வராசா
(8) ,, ,, வ. பொன்னுச்சாமி
(9) ,, ,, ஐ. திருச்செந்தூர்
(10) ,, ,, சி. சிவஞானம்
(11) ,, ,, பொ. இராமநாதன்
(12) ,, ,, சு. ஆறுமுகம்
(13) உபதலைவர் திரு. க. மார்க்கண்டன்
(14) இயக்குனர் ,, சு. இராசரத்தினம்

SITHY VINAYAGAR LIBRARY
SARLALAI WEST
CHUNNAKAM

# 1971-ம் ஆண்டு புனரமைக்கப்பட்ட ப. நோ. கூ. சங்கம்

(செல்வி அ. பத்மாவதி)

சாதி, இன, மத பேதமற்ற மனிஷீகத் தன்மைகளைக் கொண்டதே கூட்டுறவு. இந்த கூட்டுறவு இயக்கம் சோஷலிச சமுதாயத்தை உருவாக்கும் திட்டத்தின் தலைசிறந்த பங்கினை வகிக்கின்றது. நம் நாட்டில் உள்ள சாமானிய மக்களின் நல்வாழ்வுக்காகப் பணி புரிவதில் இது முன் மாதிரியாக விளங்கும். ஒரு உயிருள்ள இயக்கமாகும்.

இன்று இலங்கையைப் பொறுத்த வரையில் அரசாங்கம் கூட்டுறவு இயக்கத்துக்கு திட்டவட்டமான இடத்தினை அளித்துள்ளது. அதனூடாகவே பொருளாதார சமூக கலாச்சார முயற்சிகளை மேலும் விரிவுபடுத்தப்பட வேண்டும். விரும்புகிறது.

கூட்டுறவுத் இயக்கம் சட்டரீதியாகத் தொடங்கி 150 ஆண்டுகள் கடந்து விட்ட போதிலும்-வெறும் நுகர்ச்சித் தேவையை மட்டுமே பூர்த்திசெய்து கொண்டும்- அருந்தலான பொருட்களை விநியோகித்துக் கொண்டும் இருந்து வந்த கூட்டுறவு இயக்கம், மக்களின் வாழ்க்கையோடு இணைந்து மக்கள் இயக்கமாக மாறியது 1971-ல் புனரமைக்கப்பட்ட ப. நோ. கூ. சங்கம் ஆனதன் பின்னரே ஆகும். முன்பு மனிதருடைய தேவைகட்கு ஏற்ப பற்பல நோக்கங்களையுடைய-பல கூட்டுறவு தாபனங்கள் பொருள் வலுவற்று தனி மனிதனை சுரண்டலில் இருந்து பாதுகாத்து-தட்டுப்பாடான பொருட்களை கட்டுப்பாடாக விநியோகிக்கும் முயற்சியில்தான் கூட்டுறவு இயக்கம் இருந்து வந்தது.

ஆனால் கூட்டுறவு இயக்கத்தை மக்கள் இயக்கமாக மாற்ற எண்ணிய எமது ஐக்கிய முன்னணி அரசு நாட்டின் அபிவிருத்தித் திட்டங்களில் கூட்டுறவுக்கு முக்கியத்துவம் கொடுத்து ஐந்தாண்டுத் திட்டத்திலும் உணவு உற்பத்தி இயக்கத்திலும் முதன்மை இடத்தை கொடுத்து-இயக்கத்தை வலுப்படுத்துவதற்காக-பல நோக்கங்களைக் கொண்ட ஒரு தாபனமாக பொருளாதார வலுவுடையதாக புனரமைப்புச் செய்தது. இப்படியாக புனரமைப்புச் செய்யப்பட்டது 1971-ல் ஆகும். இவ்வாறு புனரமைக்கப்பட்ட ப. நோ. கூ. சங்கங்கள் வளர்ச்சியுற்று வரும் நாட்டின் அபிவிருத்தி நோக்கங்கட்கு ஈடுகொடுக்கும் வகையில் ஏற்றதோர் பொருளாதார சமூக, கலாசார பின்னணியை உருவாக்குவது தமது நோக்கமாகக் கொண்டிருக்கின்றன.

புனரமைக்கப்பட்டதன் பின்னர் கூட்டுறவு சங்கங்களின் அமைப்பு மாற்றப்பட்டதோடு சங்கங்களின் நோக்கங்களும் விரிவுபடுத்தப்பட்டன. புனரமைக்கப்பட்ட ப. நோ. கூ. சங்கத்தின் நோக்கங்களை உபவிதி "3" தெளிவாக எடுத்துக் காட்டுகின்றது.

"கூட்டுறவுக் கொள்கைக்கமைய உறுப்பினர்களின் பொருளாதார சமூக-கலாச்சார நலன்களுக்கு ஊக்கமளிப்பதிலும் உதவியளிப்பதிலும் உறுப்பினர்களிடையே சிக்கனம்-ஒருவர்க்கொருவர் உதவி-தன்னுதவி ஆகியவற்றை உற்சாகப்படுத்துவதுமே" சங்கத்தின் நோக்கங்களாய் இருத்தல் வேண்டும்.

வாழ்க்கையின் சமுதாயத்தின் ஏறக்குறைய எல்லா அம்சங்களையும் இவ் உபவிதி தன்னுள் அடக்குகின்றது. மனிதனுடைய பிறப்புத் தொடக்கம் இறப்பு வரை புனரமைக்கப்பட்ட ப. நோ. கூ. சங்கம் சேவையாற்றக் கூடியதாய் உள்ளது.

இன்றைய கால கட்டத்தில் இந்த நாட்டின் புனரமைக்கப்பட்ட ப. நோ. கூ. சங்கத்தின் நோக்கம் ஏதுவாக இருக்கவேண்டும் என்று எம்மை யாராவதுகேட்டால் "ஒரு பொருளாதாரப் புரட்சியை ஏற்படுத்துதல்" என்றுதான் விடைகொடுப்போம்.

அரசாங்கத்தின் பங்கு என்னவென்று கேட்டால் பொருளாதார புரட்சியை நிறைவேற்ற ப. நோ. கூ. சங்கங்கட்கு ஊக்கமளிப்பது என்போம் "அப் புரட்சி சமத்துவத்தை நோக்கி சமாதானமாகச் செல்வது. ஆனல் வேகமானதாயும்-அடிப்படை மாற்றம் விழைவதாயும் அமையும். அதனுடைய குறிக்கோள் வருமாறு :- நிறைவிளைவு - வினைத்திறன் - சமுதாய நீதி - கலாச்சார வளர்ச்சி.

இந்தப் பொருளாதார புரட்சி அழிமானத்தை அகற்றி, ஒழுக்கக் கேட்டைக் களைந்து, முறையான உழைப்பை சுரண்டிவாழும் சக்திகளை சிதைத்து எறியும். நேர்மையான உழைப்புக்கு தகுந்த சன்மானம் கொடுத்து உற்பத்தியாளரையும்-நுகர்ச்சியாளரையும் பாதுகாக்கும். மனித உழைப்பின் அகப் பிரயோகத்தைக் குறைத்து நாட்டிற்காக உழைக்கும்.

யாவருக்கும் தாழ்ந்தவர் உயர்ந்தவர் என்ற பாகுபாடின்றி தன்மானம் வழங்கும். நேர்மையும் தன்மானமுமற்ற உழைப்பிலிருந்து பிறக்கும் சலுகைகளோ-பதவிகளோ அது மதிப்பு கொடுக்க மாட்டாது. இப்படியான நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு புனரமைக்கப்பட்ட ப. நோ. கூ. சங்கங்கள் பொருளாதார வலிவுடையதாய் இருத்தல் வேண்டும்.

பொருளாதாரமே இதனுடைய நோக்கங்களை அடையும் அடித்தளம். கலை-பண்பாடு போன்றவை மேல் கட்டுமானம் என்று குறிப்பிடலாம். அடித்தளம் இன்றி மேல் கட்டுமானத்தை அமைக்க முடியாது. மேல் கட்டுமானம் இல்லாது மொட்டையாக காட்சியளிக்கும் கட்டிடம் கண்ருவியாக காட்சி கொடுக்கும் அத்தோடு பலனுடையதாகவும் அமையாது. இந்த உண்மையை உணர்ந்துதான் புனரமைக்கப்பட்ட ப. நோ. கூ. சங்கத்தின் முதல் நோக்கம் பொருளாதாரமே என்று வலியுறுத்தப் பட்டுள்ளது. இந்த அடித்தளத்திலே தான் சமூக கலாச்சார நோக்கங்களும் ஏனைய நோக்கங்களும் எய்தப்பட உள்ளன,

பொருளாதாரம் எனும்போது வெறும் நுகர்வுத் தேவைகளை மட்டுமே பூர்த்திசெய்வதன்று. உற்பத்திப் பெருக்கமே இன்று தேவையானது. இதற்காகத் தான் ப. நோ. கூ. சங்கம் கூடுதலாக விவசாய உற்பத்தியிலும் கைத் தொழில் உற்பத்தியிலும் ஈடுபடுத்தப் பட்டுள்ளது. விவசாய உற்பத்தியைப் பெருக்குவதற்கு தங்கள் தொழிற்பரப்பிலுள்ள கிராமங்கள் ஒவ்வொன்றிலும் கருத்தரங்குகள்-மகாநாடுகள்-பயிற்சி வகுப்புகள் நடாத்துகின்றது. மற்றும் விவசாயக் கடன்-உரவகைகள்-கிருமிநாசினிகள்-தெளிகருவிகள் போன்றவற்றை விநியோகம் செய்கின்றது.

உணவு விதைகள்-கன்றுகள் பெற்று கொடுத்தல் போன்றவற்றை செய்வதோடு, அரசாங்கத்திடமிருந்து காணிகளைப் பெற்று கூட்டுறவுப் பண்ணைகளையும் அமைத்து உணவுற்பத்தியைப் பெருக்குகின்றது.

இதேபோன்று உள்ளூர் வளங்களையும் பயன்படுத்தி சிறு கைத்தொழில்களை வளர்த்து வேலை வாய்ப்புகளை பெருக்கும் பொருட்டு ப. நோ. கூ. சங்கங்கள் மாவட்ட அபிவிருத்தி சபைகளுடன் இணைந்து செயலாற்றி வருகின்றன.

உள்ளூர் வளங்களையும், உள் நாட்டுத் தொழில் திறமையையும் அடிப்படையாகக் கொண்டு நாடு முழுவதிலும் சிறிய நடுத்தர தொழிற்சாலைகளை ஏற்படுத்தி அந்தந்த மாவட்டத்தின் தேவைகளையோ-நாட்டின் தேவைகளையோ நிறைவேற்றக் கூடிய பாதையில் இன்று ப. நோ. கூட்டுறவுச் சங்கங்கள் நடைபோடுகின்றன. உதாரணமாக கடதாசி அட்டை தொழிற்சாலை-பனஞ்சீனி தொழிற்சாலை போன்றவற்றைக் கூறலாம். சீனித் தட்டுப்பாட்டினை பனஞ்சீனி போக்கியுள்ளது என்று கூறின் மிகையாகாது.

சமூகத் துறையிலும் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் பயனுள்ள சேவைகளை ஆற்றி வருகின்றன. மேலும் ஆற்றலாம்- சில சங்கங்கள் சிறுவர் பாடசாலைகளை நடாத்தி வருகின்றன. இது பயன்மிக்க சேவை. இதேபோன்று வயது வந்தோருக்கும் கல்வி புகட்டுவதற்குச் சங்கங்கள் முனையலாம். இங்கிலாந்திலே தொழிலாளர் கல்வி இயக்கம் இத்தகைய முயற்சிகளை மேற்கொண்டு பெரும் வெற்றியை ஈட்டியதை இங்கு நினைவு கூருதல் நன்று. இன்றைய உலகில் இத்தகைய கல்வி நடவடிக்கை இன்றியமையாதவை. பரீட்சைகளில் சித்தி எய்துவதற்கல்ல, வேகமாக மாறிக்கொண்டு வரும் இன்றைய உலகின் அறைகூவலை வெற்றிகரமாகச் சமாளிப்பதற்கு.

கலாசாரத் துறையை நன்கு பயன்படுத்துவதனுல் எமக்கு கூட்டுறவுக் கோட்பாடுகளைப் பரப்புவதற்கு ஏதுவானதாக இருப்பதோடு நமது பண்பாட்டு முயற்சிகளும் பலமடைதலும் திண்ணமாகும். எங்கள் நாட்டின் எத்தனையோ கலைஞர்கள் திறமைமிக்கவர்களாக இருந்து தம் திறமைகளை வெளிக்காட்டுவதற்கு வாய்ப்பும் வசதியுமின்றி வாடுகின்றனர். இவர்களுக்கு வேண்டிய வாய்ப்புகளும் உதவியும் அளிப்பதற்கு சங்கக்கிளைக் குழுக்களின் உதவி நாடலாம். போட்டிகள், கலைவிழாக்களை நடாத்தி அல்லது நடாத்தப்படுவதற்கு உதவி கலாசார வளர்ச்சிக்கு உரம் ஊட்டலாம்.

ஈழத்து எழுத்தாளர்கள் படைப்புகளை தமது பரப்பிலேயுள்ள பாடசாலைகளுக்கும், நூலகங்களுக்கும் விநியோகிப்பதன் மூலம் எமது நாட்டு இலக்கியத்தின் வளர்ச்சி ஓங்குவதற்கு உறுதுணையாவதோடு நல்ல வருவாயைப் பெறவும் முனையலாம். கலாசாரத் துறையிலே சங்கங்களின் பணிகள் பற்றிக் குறிப்பிடும்போது அண்மையில் யாழ்ப்பாணத்தில் ஒரு ப. நோ. கூ. சங்கம் ஒரு சினிமா ஸ்தாபனத்தை நடாத்த முன்வந்துள்ளதை குறிப்பிடலாம். இது வட பகுதியின் ஒரு முன்னேடியான செயலாகும்.

வேறு பல சமூகப் பணிகளையும் சங்கங்கள் மேற்கொள்ளலாம், வலது குறைந்தோர்க்கு உதவும் திட்டங்கள் சமூக நிறுவனங்களுக்கு உதவல், பாடசாலைகள் பொது நிறுவனங்களுங்கு உதவியளித்தல், உடல் நலத் திட்டங்களுக்கு ஆதரவு கொடுத்தல் என்று பல வகையாக பல துறைகளிலும் ஓரளவு ஆக்கபூர்வமான பணிகளையும் ஆற்றி வரலாம். ஆற்றியும் வருகின்றனர். பொழுது

போக்குத் துறையிலும் சங்கங்கள் பயன்மிக்க வழிகளில் பணியாற்ற வேண்டும். இவ்வகையிலே தனியார் துறை வழிகாட்டியிருக்கின்றது. விளையாட்டுப் போட்டிகளை நடாத்துதல், அல்லது நடாத்த உதவுதல். விளையாட்டு வீரர்களுக்கு வேலைவாய்ப்புகளை அளித்தல். பொழுதுபோக்குச் சாதனங்களை அன்பளிப்புச் செய்தல் என தனியார் துறை பணியாற்றி வருவதை நாம் காண்கின்றோம். இந்த முன் மாதிரியைப் பின்பற்றி யாழ் மாவட்டத்திலுள்ள ப. நோ. கூ. சங்கம் ஒன்று ''கிரிக்கெட்'' போட்டியை நடாத்தவும் தகுதிவாய்ந்த விளையாட்டு வீரர்களுக்கு வேலை வாய்ப்புகளை வழங்குவதற்கும் முன்வந்திருப்பது வரவேற்க வேண்டிய விடயமாகும்.

எனவே சமூகத்தில் சகல பொருளாதார கலாச்சார வாழ்வுடன் ப. நோ. கூ. சங்கம் பின்னிப் பிணைந்துள்ளது என்று கூறின் மிகையாகாது. பொருளாதார நோக்கங்கள் ப. நோ. கூ. சங்கம் அடையவேண்டியதுதான் ஆனால் அதற்காக மற்றைய நோக்கங்களை புறக்கணிக்கவேண்டியதில்லை. மனிதனுக்கு வயிறு மட்டுமல்ல அவனுக்கு ஆன்மாவும் உண்டு.



VINAYAGAR LIBRARY
EARLALAI WEST
CHUNNAKAM

1974ம் ஆண்டு நடைபெற்ற எமது கூட்டுறவு தினவிழா ஊர்வலத்தில் கௌரவ தபால் தந்தி அமைச்சர் செல்லையா குமாரசூரியர் அவர்களுடன் எமது தலைவர் திரு. குமாரசாமி விநோதன், தோழர் வ. பொன்னம்பலம் எமது கலாச்சார உத்தியோகத்தர் திரு. சி. சிவஞானம் (சுசிதர்) ஆகியோர்.

# எமது பொதுமுகாமையாளர் பேசுகின்றார்



திரு. த. சந்திரகாசன்

## நிதானமான எமது முன்னேற்றமும் சேவையும்

1971ம் ஆண்டு பின்வரும் நோக்கங்களிற்காக கூட்டுறவு இயக்கம் புனரமைக்கப்பட்டது.

[1] மக்களை கூட்டுறவு இயக்கத்தில் கூடுதலாகப் பங்குபற்றச் செய்வதற்கு.
[2] ஊழியர்களுக்கு நியாயமான வேதனத்திட்டத்தை நிர்ணயிப்பதற்கு.
[3] நாட்டின் அபிவிருத்தியில் அக்கறையுடன் பொதுமக்களைப் பங்குபற்ற வைப்பதற்கு.
[4] பொருளாதார வலுவில்லாத சமாசங்களை அகற்றுவதற்கு.

இத் திட்டத்தின் கீழ் வலி வடக்குப் பல. நோ. கூ. சங்கச் சமாசம் மூன்று ஆரம்ப சங்கங்களின் எல்லையாக வகுக்கப்பட்டு, சுன்னுகம், ஏழாலை, உடுவில் கிராமாட்சிமன்ற எல்லைக்குள் இருந்த பத்து பல. நோ. கூ. சங்கங்களையும், பதின்மூன்று பண்டகசாலைச் சங்கங்களையும் ஒன்றுசேர்த்து சுன்னுகம் பல. நோ. கூ. சங்கமென்ற பெயரில் இச்சங்கம் 12 - 3 - 1971ம் ஆண்டு பதிவு செய்யப்பட்டு 22 - 5 - 1971ல் ஒருங்கிணைக்கப்பட்டு தனது முயற்சிகளை ஆரம்பித்தது.

இவ்வாரம்ப சங்கத்தின் தொழிற்பாடுகளைப் பின்வருமாறு வகைப்படுத்தலாம்.

### (அ) நுகர்ச்சி விநியோகம்:

இரண்டு மொத்த நிலையங்களையும் 34 பங்கீட்டுப் புத்தகங்கள் இணைக்கப்பட்ட நிலையங்களையும் கொண்டுள்ளது. இந்நிலையங்களில் இணைக்கப்பட்டுள்ள பங்கீட்டுப் புத்தகங்களின் எண்ணிக்கை 39873 ஆகும். இவற்றைத் தவிர சங்கத்துடன் இணைக்கப்பட்டுள்ள 16 உ. பெ. வியாபாரிகள் 9335 கூப்பன் புத்தகங்களைக் கொண்டுள்ளார்கள். பங்கீட்டுப் புத்தகங்கள் இணைக்கப்பட்ட நிலையங்களைத்தவிர பின்வரும் விற்பனை நிலையங்களும் சங்கத்திற்குண்டு.

| | | |
|---|---|---|
| [1] | கட்டடப் பொருட்களின் விற்பனை நிலையம் | — 1 |
| [2] | விவசாயப் பொருட்கள் விற்பனை நிலையம் | — 1 |
| [3] | பிடவை விற்பனை நிலையங்கள் | — 5 |
| [4] | எரிபொருள் நிலையம் | — 1 |

இவற்றைத் தவிர கடந்தமாதம் கல்லாக்கட்டுவன் கிராமத்தில் ஆரம் பிக்கப்பட்ட விற்பனை நிலையமும் சேவையாற்றுவதுடன், கட்டுவன் தெற்கில் ஒரு விற்பனை நிலையம் அண்மையில் திறக்கப்படவுள்ளது.

(ஆ) கிராமிய சேமிப்புக்களும் கிராமியக் கடனும்:

மக்களிடையே சேமிப்புப் பழக்கத்தை ஏற்படுத்துவதற்காகவும், நீண்ட கால குறுகிய காலக் கடன்களை வழங்குவதற்காகவும் இரண்டு கிராமிய வங்கிகள் இணுவிலில் ஒன்றும் ஏழாலையில் ஒன்றுமாக செயலாற்றி வருகின்றன. மேலும் குப்பிளான் கிராமத்தில் ஒரு கிராமிய வங்கி திறப்பதற்கான அங்கீகாரம் பெறப்பட்டு, இது சேவையாற்றுவதற்கு வேண்டிய ஒழுங்குகள் செய்யப்பட்டு வருகின்றன.

(இ) விவசாயக் கடன்:

அரசாங்கத்தின் கடன் திட்டத்தின் கீழும், மக்கள் வங்கியின் கிராமிய கடன் திட்டத்தின் கீழும் அங்கத்தவர்களிற்கு சங்கத்தின் மூலம் கடன்கள் வழங்கப்படுகின்றன.

(ஈ) சிறு கைத்தொழில்கள்:

[1] மூன்று கைத்தறி நிலையங்கள்.
[2] பாண் உற்பத்தி நிலையம் ஒன்று.
[3] பீடி உற்பத்தி நிலையம் இரண்டு.
[4] வர்த்தக ரீதியிலான கடதாசிப் பைகள் உற்பத்தி நிலையம் ஒன்று.

சங்கத்தின் கைத்தொழிற்பாடுகள் இன்றைய தேவைக்குப் போதுமானதாக அமையாவிட்டாலும் கூட மேலும் பல தொழில்களில் தன்னை ஈடுபடுத்திக்கொள்ள சங்கம் தன்னைத் தயார்படுத்திக் கொண்டுள்ளது.

(உ) கட்டட ஒப்பந்தப்பகுதி:

இச்சங்கம் முன்மாதிரியாக ஒரு கட்டட நிர்மாணப் பகுதியையும் தன்னகத்தே கொண்டு இயங்கி வருகின்றது. அரசாங்கத் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் போன்றவற்றின் பாரிய நிர்மாண வேலைகளை இப்பகுதி பெறுப்பேற்றுச் செய்து வருகின்றது.

(ஊ) கூலி ஒப்பந்தம்:

இச்சங்கம் நெற்சந்தைப்படுத்தும் சபைக்காக அவர்களின் சுன்னுகம் ஆலை, சுன்னுகம் களஞ்சியம் ஆகிய இரு ஸ்தலங்களில் கூலி ஒப்பந்த வேலைகள் செய்து வருவதுடன் கிராமிய நிறுவனங்களின் பணிப்பாளருக்காக புத்தூர் உரக் களஞ்சியத்திலும் கூலி ஒப்பந்த வேலைகள் செய்து வருகின்றது.

(எ) கலைகலாசாரப் பிரிவு:

சங்கம் ஒரு கூட்டுறவு வர்த்தக ஸ்தாபனமாக மட்டும் அமையாது இந்நாட்டின் முதுசொத்தான கலை கலாச்சாரத்தைக் கட்டி வளர்க்க வேண்டுமென்ற நோக்குடன் இதன் தலைவர் திரு. குமாரசுவாமி - விநோதன் அவர்களின் முயற்சியின் பயனுக ஒரு கலைகலாச்சார பிரிவை அண்மையில் ஆரம்பித்துள்ளது. இப்பிரிவு இதுவரை ''விழிப்பு'' என்ற நாடகத்தையும், மயிலும் குயிலும் என்ற கலை நிகழ்ச்சியையும் மேடையேற்றி வெற்றி கண்டுள்ளதும், இப்பிரிவு இலங்கையிலேயே முதன்முதலாக பல. நோ. கூ. சங்கம் ஒன்றினுல் ஆரம்பித்து வைக்கப்பட்டதும் இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

பங்கு மூலதனம்:

தனி அங்கத்தவர்களின் பங்கு மூலதனமாக 22-5-71ல் ரூபா 159594 ஆக 5174 அங்கத்தவர்களைக் கொண்டு இருந்த சங்கம் 31-7-76ல் 6863 அங்கத்தவர்களுடன் ரூபா 231591 பங்கு முதலைக் கொண்டுள்ளது.

மூலதன அமைப்பு:

கூட்டுறவு இயக்கமானது மூலதனத்துக்காக தனது அங்கத்தவர்களில் தங்கியிருக்க முடியாது. காரணம் சாதாரண ஏழைகளை அங்கத்தவர்களாகக் கொண்டுள்ள சங்கம் தனது மூலதன தேவைகளுக்காக மக்கள் வங்கியில் தங்கியிருப்பது இயற்கையே. எனினும் கடன்கள் தவிர்ந்த சங்கத்தின் மூலதனங்கள் பின்வருமாறு:

| திகதி | பங்கு | ஒதுக்குநிதி |
|---|---|---|
| 22-5-71 | ரூபா 162377-00 | ரூபா 224367 00 |
| 30-6-72 | ரூபா 169073-00 | ரூபா 204378-00 |
| 30-6-73 | ரூபா 169757-00 | ரூபா 292057-00 |
| 23-6-74 | ரூபா 190108-00 | ரூபா 327093.00 |
| 31-7-75 | ரூபா 208073-00 | ரூபா 350546.00 |

(ஐ) கடந்த காலத்தில் சங்கம் எய்திய சுத்தஇலாபங்கள்:

| திகதி | ரூபா |
|---|---|
| 30-6-72 | 160735-00 |
| 30-6 73 | 122994-00 |
| 31-7-74 | 140146-00 |
| 31-7-75 | 93812-00 |

சங்கத்தின் கடந்தகால விற்பனை விபரம்:

| திகதி | ரூபா |
|---|---|
| 30-6-72 | 10154441-00 |
| 30-6-73 | 10858789-00 |
| 31-7-74 | 11770193-00 |

கடந்த ஆண்டுகளில் ஊழியர்களுக்கு வழங்கிய சம்பளம், கூலி, மேலதிக நேரச் சம்பளம் விபரங்கள்:

| திகதி | ரூபா |
|---|---|
| 30-6-72 | 290594-00 |
| 30-6.73 | 381778-00 |
| 31-7-74 | 421352-00 |
| 31-7-75 | 699275-00 |

இலாபப் பங்கிடுகள்:

| வருடம் | பங்குவட்டி |
|---|---|
| 71 / 72 | ரூபா 14911-00 |
| 72 / 73 | ரூபா 9123-00 |

நன்கூலி:

| வருடம் | ரூபா |
|---|---|
| 71 / 72 | ரூபா 21620-00 |
| 72 / 73 | ரூபா 17113-00 |


# மட்டுப்படுத்தப்பட்ட
# சுன்னுகம் பல. நோ. கூ. சங்கம்

**ஓர் அறிமுகம்:**

| | |
|---|---|
| நிருவாக மாவட்டம் | — யாழ்ப்பாணம். |
| உதவி அரசாங்க அதிபர் பிரிவு | — வலி தெற்கு, |
| உதவி அரசாங்க அதிபர் காரியாலயம் | — சுன்னுகம். |
| கூ. ஆ ஆணையாளர் பிரிவு | — யாழ்ப்பாணம். |
| சங்கத்தொழில் எல்லை | — உடுவில் தொகுதியை முழுமையாகக் கோப்பாய்த் தொகுதியின் ஒருபகுதி யையும் கொண்டு அவற்றுள் அமைந்த சுன்னுகம் பட்டினசபை, உடுவில் கிராமசபை, ஏழாலைக் கிராமசபை, களையும் கொண்டுள்ளது. |
| எல்லைப்பரப்பு | — கிட்டத்தட்ட 20 ச. மைல் |
| பாவனையாளர்களின் எண்ணிக்கை | — 49208 |
| மொத்த விற்பனை நிலையங்கள் | — 2 |
| சில்லறை விற்பனை நிலையங்கள் | — 35 |
| மொத்தப் பணியாளர் | — 261 [துண்டுவீத பணியாளர் உட்பட] |
| அஞ்சல் முகவரி | — சுன்னுகம். |
| செயலக தொலைபேசி இலக்கம் | — சுன்னுகம் — 203 |
| யாழ்நகரில் இருந்து தூரம் | — 6 மைல். |
| கிட்டிய புகையிரத நிலையம் | — சுன்னுகம் [$\frac{1}{4}$ மைல்] |



1974-ம் ஆண்டு கூட்டுறவு தினவிழாவில் கலந்துகொண்ட
மக்கள் கூட்டத்தில் ஒரு பகுதி.



# கொள்கையோடு கூடுவோம்

ஆலைச் சொந்தக் காரர்களாலும் பெரும் பெரும் பிரபுக்களாலும் நசுக்கப்பட்ட தொழிலாளர்களுக்குக் கூட்டுறவு இயக்கமே ஆக்கம் அளித்ததென்பது சரித்திர உண்மை. சர்வதேசக் கூட்டுறவாளர் தின விழாக் கொண்டாடும் நாம் சகல உலகுக்கும் கூட்டுறவு வாழ்க்கை முறையை நினைவு படுத்திய ஏழைக் கம்பளி நெசவாளர்களாகிய ரொச்டேல் முன்னோடிகளை மறக்க முடியாது. அன்னார் கடைப்பிடித்த கூட்டுறவுக் கொள்கைகளைத் துறக்க முடியாது துறந்தால் சர்வதேசக் கூட்டுறவாளர் தினவிழாவை நினைக்கவும் முடியாது.

கூட்டுறவியக்கம் மாசு மறுவின்றித் தன்னிகரில்லா இயக்கமாக வளர நாடு வளமடைய அம் முன்னோடிகள் காட்டிய கூட்டுறவுக் கொள்கைகளை அரண்களாகக் கொண்டு கூட்டுறவாளர்களும், பணியாளர்களும் ஒன்றுபட்டுச் செயற்பட வேண்டும். ''ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு'' என்று உதட்டிலோ; ஏட்டிலோ காட்டினுற் போதாது. அதை நாட்டிலே நிலை நாட்ட வேண்டும்.

வ. பேரின்பநாயகம்

தலைவர்-(இலங்கைக் கூட்டுறவு ஊழியர்)
சம்மேளனம், சுன்னுகம் கிளை



சுன்னாகம் பல. நோ. கூ. சங்கம்
(வரைவுள்ளது) சுன்னாகம்

# கூட்டுறவு மக்கள் இயக்கம்

திரு. க. மார்க்கண்டன்
(உபதலைவர்)


1970-ம் ஆண்டு ஆட்சிக்கு வந்த ஐக்கிய முன்னணி அரசு இந்த நாட்டிலே உள்ள விவசாய ஏழைப் பொதுமக்களுக்காக பல முன்னேற்றத் திட்டங்களை நிறைவேற்றியுள்ளது. இதனால் பாதிக்கப்பட்ட பிற்போக்குவாதிகள் இவற்றை ஜனநாயகத்துக்கு விரோதமான செயற்பாடுகள் என்று குறிப்பிடுகிறார்கள். ஜனநாயகம் என்றால் சுருக்கமாக மக்களின் ஆட்சி என்பது பொருளாகும், இந்தப் பரந்த சித்தாந்தத்தை ஒரு சிறு வசனத்தில் அடக்கியுள்ளார்கள். திருமதி இந்திராகாந்தி அவர்கள் 1976-ம் ஆண்டு மாசி மாதம் 22-ந் திகதி இந்தியாவிலுள்ள பம்பாய் நகரில் அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டிக்குரிய ஜனநாயகம் என்ற பொருள் பற்றி உரையாற்றும் பொழுது ஜனநாயகம் அரசியல் பொருளாதார சமூகவிடயங்களை அடிப்படையாகக் கொண்டதாகும். இவைகள் யாவும் மக்களுக்கு எளிதில் கிட்டும் பொழுது ஜனநாயகம் பூரணமாகிறது. அதனால் முற்போக்கு நடவடிக்கை எடுக்கும் எந்த அரசும் ஓர் ஜனநாயக அரசென்றே குறிப்பிட வேண்டியிருக்கிறது.

கூட்டுறவு இயக்கம் உலகில் சுமார் இருநூறு வருடங்களுக்கு முன், இவ்வியக்கம் 1911-ம் ஆண்டு ஆரம்பமாகியது. இவ்வியக்கம் சில தனிப்பட்டவர்களின் கையில்தான் சிக்கிக்கொண்டு சின்னாபின்னமடைந்தது என்பதை மிக மிக மனவருத்தத்துடன் அறியத்தருகின்றேன். கூட்டுறவு இயக்கத்தில் கடமையாற்றும் தலைவர் முதல் காரியாலயத்திலோ அல்லது விற்பனை நிலையங்களிலோ வேலை செய்பவர்கள் ஒரு வர்க்கத்தைச் சேர்ந்தவர்கள். இவர்கள் மக்களுக்கு அன்றாட தேவைக்குட்பட்ட பொருட்களை விநியோகம் செய்பவர்களே அல்லாமல், எமது அரசாங்கம் கைக்கொண்டிருக்கும் கிராமிய பொருளாதாரத்தைக் கட்டிவளர்க்கவில்லை. 1971-ம் ஆண்டு இச்சங்கங்கள் எல்லாம் ஒன்று இணைக்கப்பட்டன. அன்று முதல் இன்று வரை பல. நோ. கூ. சங்கங்கள் ஆற்றி வருகின்ற சேவை ஒரு முக்கிய சேவையாகும். பொருளாதார விடயத்தில் சகல மக்களும் ஜாதி மத இன வர்க்க பேதமின்றி இந்த நாட்டில் ஆட்சியில் பங்குகொண்டு தங்கள் வாழ்க்கையை நிர்ணயிக்கும் பொறுப்பு இவர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. பல. நோ. கூ. சங்கங்கள் யாவும் ஓர் குழந்தைப் பருவத்தில் தான் இருக்கின்றன. இவைகளை முன்னெடுத்து மக்களின்

நலனுக்காகச் சேவை செய்வது இந்நாட்டு மக்களின் ஓர் முக்கிய பொறுப்பாகும். ஸ்ரீ. ல. சு. கட்சியும் கூட்டுறவு இயக்கமும் ஒன்ருேடொன்று பின்னிப் பிணைக்கப்பட்டிருக்கின்றன. கூட்டுறவு இயக்கத்தைப் பற்றிப் பேசுகின்றவர்கள் சோவியத்திருநாட்டையும், நவசீனத்தையும் உதாரணமாக எடுத்துக்காட்டுகின்றனர். ஆனல் நமது இந்தநாட்டில் இயக்கத்திற்கு மெரு கூட்டியவர் அமரர் பண்டாரநாயக்கா என்பதை யாரும் மறைக்கவோ, மறுக்கவோ, முடியாது. 1932-ம் ஆண்டு சட்டசபையிலே இலங்கையில் காணி மசோதா விடயம்பற்றி பேசுகின்றபொழுது அமரர் அவர்கள் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார். இந்தநாட்டிலேயுள்ள தேவைக்கு மிஞ்சிய நிலங்கள் யாவும் அரசுடைமையாக்கப்படவேண்டும். இந்நிலங்கள் கூட்டுறவு விவசாயம், கூட்டுப்பண்ணைகள் அமைத்து இந்த நாட்டுமக்களின் கிராமிய பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப வேண்டுமென்று குறிப்பிட்டு இருந்தார். ஐக்கிய முன்னணி அரசு, கிராம மக்களுக்கும், பின் தங்கிய மக்களுக்கும் கூட்டுறவு மூலம் அரும் பெரும் சேவையாற்றி வருகிறது. இந்த நாட்டு மக்களின் முன்னேற்றம் கூட்டுறவில் தான் இருகிறது என்பதில் எனக்கு எவ்வித சந்தேகமுமில்லை.

நண்பர் விநோதன் அவர்கள் தலைமை தாங்கும் இயக்குநர்சபை எமது பகுதியிலே உள்ள பல சமூக! மக்களையும் கொண்டுள்ளது. அவருடைய இயக்குநர்சபையில் ஓர் அங்கத்தவராக இருந்து சேவையாற்றுவதில் அளவில்லாத சந்தோஷம் அடைகின்றேன்.

" வளரட்டும் கூட்டுறவு !
வளரட்டும் மக்கள் இயக்கம் !



1974ம் ஆண்டு கூட்டுறவு தினவிழாவில் தலைவர் பேசுகின்ருர். அமைச்சர்கள் T. B. இலங்கரத்தின, செல்லையா குமாரசூரியர் ஆகியோர் மேடையில் வீற்றிருக்கின்றனர்.

# சங்கமும் ஊழியர்களும்



திரு. சி. பேரின்பநாயகம் அவர்கள்
(தலைவர், ஸ்ரீ. ல. சு. கூ. ஊழியர் சங்கம்)

சுன்னாகம் பல நோக்கக் கூட்டுறவுச் சங்கம், சர்வதேச கூட்டுறவாளர் தின விழாவை வெகு சிறப்பாகக் கொண்டாடிக் கொண்டிருக்கும் இந்த நல்லவேளையிலே ஸ்ரீ லங்கா சுதந்திர கூட்டுறவு ஊழியர் சங்கத்தின் சுன்னாகக் கிளையின் சார்பில் எனது கருத்தையும் கூற வாய்ப்பளித்தமைக்காக நான் மகிழ்ச்சியடைகிறேன்.

எந்தவொரு நிறுவனமோ, தொழில் ஸ்தாபனமோ, அதனை தன் தொழிலாளர்களின் முழுமையான ஆதரவைப் பெறத்தவறுமிடத்து தனது உண்மையான வளர்ச்சி இலக்கை அடைந்துவிடமுடியாது. அவ்வாறே நியாயமான நிபந்தனைகளை அலட்சியப் படுத்தி, நிர்வாகத்தின் முழுவெறுப்புக்கும் ஆளாகுகின்ற தொழிலாளர் அணிகளும் நீண்டகாலம் வாழ்ந்ததாகச் சரித்திரமில்லை எமது சங்கத்தையும் இங்கு கடமையாற்றுகின்ற ஊழியர்களையும் பொறுத்தமட்டில் இவ்வித மனமொவ்வாத காரியங்கள் மிக அரிதென்றே கூறல் வேண்டும். சங்கத்தின் நிர்வாகம் தொழிலாளர்களின் இன்றியமையாத ஒத்துழைப்பையும் அவர்களால் இச்சங்கம் எதிர்நோக்கவுள்ள வளர்ச்சிப் போக்கையும் கருத்திற் கொண்டு, சகல தொழிலாளர்களுடனும் ஒட்டி உறவாடி அவர்கள் மூலமாக மிகச் சிறந்த சேவையைப் பெற்று வருகின்றது. நிர்வாகம் எதிர்பார்ப்பதிலும் பார்க்க மிகக் கூடிய சேவையைப் பெரும்பாலான ஊழியர்கள் ஆற்றி வருகிறார்கள் என்பது யாரும் யாருக்கும் சொல்லித் தெரிந்துகொள்ள வேண்டிய விசயமல்ல. இச் சங்கத்தின் தொழிலாளர்களிடையே இரண்டு தொழிற் சங்கங்கள் இருந்தபோதும், அவற்றின் அடிப்படைக் கொள்கைகளிலே, வேறுபாடுகள் இருந்தபோதும், சங்கத்தின் வளர்ச்சிக்காக நாம் உழைக்கவேண்டுமென்ற கொள்கையில் இரு திறத்தாரும் ஒன்றுபட்டவர்கள் என்பதை யாவரும் அறிவர். புனரமைப்பை அடுத்து வந்த சங்கத்தின் சரித்திரத்திலே ஊழியர்களுக்கும்

நிர்வாகத்துக்குமிடையே பலத்த கருத்துவேறுபாடுகள் நிகழ்ந்தமையும், அடிக்கடி அன்றிருந்த தொழிற்சங்கம் வேலை நிறுத்த முடிவுகளை எடுத்தமையும் நாமறிந்த உண்மைகள். அண்மைக் காலங்களில் அத்தகைய பரபரப்புக்கள் எதனையும் நிர்வாகத்திற்கெதிராக எடுக்காமல் எந்தத் தொழிலாளர்களின் எப்பேர்ப்பட்ட பிரச்சினையாக இருந்தாலும் அவற்றையெல்லாம் உடனுக்குடன் நிர்வாகத்துடன் பேசி அவைகளுக்கான சரியான தீர்வுகளை தொழிற் சங்கத்தின் தலைவர் என்றவகையில் நானும் என்னுடன் தோளோடு தோள்நின்று ஒத்துழைக்கும் உடன் பிறப்புக்கும் வழிசமைத்து வருகின்றோம்.

ஆனபோதும் தேசியரீதியாக நோக்கும்போது கூட்டுறவுத் தொழிலாளர்களின் வாழ்வு அவலம் நிறைந்த பல சம்பவங்களை நாள் தோறும் சந்திக்கின்றதென்ற உண்மையை யாரும் மறுத்துவிட முடியாது. இது சங்க நிர்வாகத்திற்கும், ஊழியர்களுக்கும் இடைப்பட்ட ஒரு பிரச்சினையல்ல, நாடுபூராவும் உள்ள நிலை இதற்குச் சரியான பரிகாரம் நாட்டிலுள்ள சகல கூட்டுறவுத் தொழிலாளர்களும் ஒன்றுபட்ட நிலையில் நின்று குரல் கொடுப்பதே இன்று கோலாகலமாகச் சர்வதேசக் கூட்டுறவாளர் தினவிழாவைக் கொண்டாடிக் கொண்டிருக்கும் சுன்னுகம் பலநோக்கக் கூட்டுறவுச் சங்கம் அடுத்த ஆண்டும் இவ்விழாவை மிகச் சிறப்பாகக் கொண்டாடவேண்டும். இன்றுள்ள நிலையிலும் பார்க்க சங்கத்தின் நிலை பன்மடங்கு உயர்ந்திருக்க வேண்டும். விழாவும் சிறப்படைந்து சங்கத்தின் நிலையும் உயர்ந்தால் மட்டும் போதாது. சங்கத்திற்காக உழைக்கின்ற தொழிலாளர்களின் வாழ்க்கை நிலையும் உயர்தல் வேண்டும். அதற்காகத் தொழிலாளர்கள் ஐக்கியப்படுதல் வேண்டும். ஐக்கியப்பட்ட தொழிலாளர்களினுல் எல்லாம் வல்ல உழைப்பினுல்தான் சங்கமும் ஊழியரும் முன்னேற முடியுமென்பதை ஊழியர்களும் நிர்வாகமும் கருத்திற் கொள்ளல் வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, விடைபெறுகின்றேன்.

ஓங்கட்டும் தொழிலாளர் ஜனநாயகம்
உயரட்டு எமது ஸ்தாபனம்.

நன்றி

---

"கூட்டுறவே நாட்டுயர்வு"

"உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்
மற்றெல்லாம் தொழுதுண்டு பின் செல்பவர்"

"உழவுக்கும் தொழிலுக்கும்
வந்தனை செய்வோம்"

சுன்னுகம்

ப. நோ. கூ. சங்கம்

பற்றிய

ஒரு கண்ணேட்டம்



இச்சங்கம் 4-9-76 இல் கூட்டுறவாளர் தினக் கொண்டாட்டத்தை குறிக்கும் முகமாக பிரசுரிக்கும் விழா மலருக்கு, இவ்விபரத்தை நான் தருவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

இச்சங்கம் 1971-ம் ஆண்டு செயல்படுத்தப்பட்ட புனரமைப்புத் திட்டத்தின் பின்னர் பல துறைகளிலும் துரித முன்னேற்றம் கண்டு மக்களுக்கு சிறந்த சேவையாற்றி வருகின்றது.

**நுகர்ச்சிப் பகுதி:**

இச்சங்கத்தின் எல்லைப்பரப்பு அடங்கிலும், 36 கிளைகள் மூலம் சுமார் 50,000 பாவனையாளர்களுக்கு உணவுப் பொருட்களையும், மிகவும் அத்தியாவசியமான பொருட்களையும் சம பங்கீட்டு முறையில் விநியோகம் செய்து வருகின்றது. இக்காலத்துக்குள் பாவனையாளர்களின் வசதிக்கு ஏற்ப 10 விற்பனை நிலையங்களையும் திறந்துள்ளது.

**கைத்தொழிற் பகுதி:**

ஏழாலையிலும், இணுவிலிலும் இரு கைத்தறி நிலையங்களை ஆரம்பித்து பலருக்கு வேலைவாய்ப்புக் கொடுத்ததோடு, உள்ளூர் உற்பத்திக்கும் உற்சாகம் காட்டி வருகின்றது. மேலும், உடுவிலில் ஒரு கடதாசிப் பை செய்யும் தொழிற்சாலையும், பீடி சுற்றும் தொழிற்சாலையும் ஆரம்பித்து குடிசைக் கைத்தொழிலுக்கு முக்கியத்துவம் கொடுத்து வருகின்றது. கைத்தொழிற் துறையில் இச்சங்கம் எதிர்காலத்தில் மேலும், பல தொண்டுகளையாற்றும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

**விவசாயப் பகுதி:**

உப உணவுச் செய்கைக்கு தேவையான கடன்களை அங்கத்துவ விவசாயிகளுக்கு வழங்கி வருகின்றது. இன்று வரையும் அங்கத்தவரிடம் இருந்து வருமதியான கடன் தொகை ரூபா 742, 903-31 சதமாகும். 8 விவசாயக் கிளைகள் மூலம் விவசாயிகளுக்கு தேவையான உரம், கிருமிநாசினி ஆகியவற்றை நியாயமான விலையில் விநியோகம் செய்து வருகின்றது.

கிராமிய வங்கி:

இணுவிலிலும், ஏழாலையிலும் இரு கிராகிய வங்கிகள் ஸ்தாபிக்கப்பட்டுள்ளன. இக்கிராமிய வங்கி மக்களுக்கு அளப்பரிய சேவையாற்றி வருகின்றது. விவசாயக் கடன், மத்தியகாலக்கடன், விரிவாக்க கடன்கள் ஆகியவற்றை அங்கத்தவர்களுக்கு இக்கிளைகள் மூலம் வழங்கி வருகின்றது. குறிப்பாக சேமிப்புத்திட்டம் திருப்திகரமாக செயல்பட்டு வருகின்றது. இதுவரையும் அங்கத்தவர்களின் சேமிப்புத்தொகை ரூபா 99913-07 சதமாகும். அங்கத்தவர் அல்லாதோர் சேமிப்புத் தொகை ரூபா 90902-80 சதமாகும். மேலும், குப்பிழானில் ஓர் கிராமிய வங்கிக் கிளையை ஆரம்பிப்பதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டு வருகின்றது.

வாகனப் பகுதி:

சங்கத்துக்குச் சொந்தமாக 4 வாகனங்கள் உள்ளது. இவ்வாகனங்கள் மூலம் கொழும்பில் இருந்தும், வேறு இடங்களில் இருந்தும் பொருட்களை ஏற்றுமதி செய்வதற்கும், கிளைகளுக்கு உரிய நேரத்தில் பொருட்களை விநியோகம் செய்வதற்கும் சிறந்த சேவையாற்றி வருகின்றது.

ஒப்பந்தப் பகுதி:

பல இலாகாக்களிடம் இருந்தும் பல ஒப்பந்த வேலைகளை ஏற்று நடாத்தியுள்ளது. தற்பொழுது புத்தளத்தில் கட்டிட ஒப்பந்த வேலை ஏற்று நடாத்தி பாரம் கொடுக்கும் நிலையில் உள்ளது. மேலும் பல ஒப்பந்த வேலைகளை ஏற்று நடாத்த ஒழுங்குகள் செய்யப்பட்டு வருகின்றது.

பாலர் பாடசாலை:

இளம் சிறுர்களின் கல்வியில் உயர்ச்சி காணும் நோக்கமாக ஏழாலையிலும், மயிலணியிலும் இரு சிறுவர் பாடசாலையை ஆரம்பித்துள்ளது. இதன் காரணமாக இச்சங்கம் சமூகத் தொண்டாற்றுவதோடு, 4 இளம் பெண்மணிகளுக்கும் வேலைவாய்ப்புக்கும் இடம் கொடுத்துள்ளது என்பதை குறிப்பிட விரும்புகின்றேன்.

எரிபொருள் நிலையம்:

கடந்த வருடம் பெற்றோலியம் கூட்டுத்ஸ்தாபனத்தில் இருந்து இவ் நிலையத்தைக் கையேற்று நடாத்தி வருகின்றது. கிருமிநாசினி, எரிபொருட்கள் போன்ற பொருட்களை மக்களுக்கு உரிய நேரத்தில் வழங்கி வருவதோடு, தட்டுப்பாடான நேரங்களில் பாவனையாளருக்கு சம பங்கீட்டு முறையில் மண்ணெய் விநியோகத்தையும் மேற்கொண்டு வருகின்றது.

கலைகலாசார பகுதி:

இப்பகுதி இவ்வருடத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இப்பிரிவு அங்கத்தவர்களின் கலாசாரத் துறைக்கு உற்சாகம் அளித்து வருகின்றது. இளம் கலைஞர்களின் கலையை வளர்ப்பதற்கும் ஊன்றுகோலாக இருக்கின்றது. இக்காலத்துக்குள் நல்ல தரமான "விழிப்பு" என்னும் தரமான நாடகத்தை மேடையேற்றி மக்களின் பாராட்டையும் பெற்றுள்ளது. இந் நாடகத்தின் மூலம் ரூபா 2575/- சுத்த லாபமாகப் பெற்றுள்ளதென்பதைக் குறிப்பிட விரும்புகின்றேன்.

பொது:

6510 அங்கத்தவர்களை 28 கிளைகளிலும் அடக்கியுள்ளது. இதில் 210 ஊழியர்கள் சேவையாற்றி வருகின்றார்கள். புனரமைக்கப்பட்ட காலத்தில் இருந்து 1975-ம் ஆண்டு வரையும் இச்சங்கம் எய்தியுள்ள சுத்தலாபங்களின் விபரம் பின்வருமாறு:

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 12-3-71 | — | 30-6-72 | வரை | ரூபா | 160,735-16 |
| 1-7-72 | — | 30-6-73 | வரை | ரூபா | 122,994-76 |
| 1-7-73 | — | 30-7-76 | வரை | ரூபா | 140,146-07 |
| 1-8-75 | — | 31-7-75 | வரை | ரூபா | 93,812-24 ஆகும். |

மேலும், இச்சங்கத்தில் இயக்குனர் குழு காலத்துக்கு காலம் கூடி சங்கத்தின் முன்னேற்றத்திற்கு தேவையான திட்டங்களை உருவாக்கியும் வருகின்றார்கள். இத் திட்டங்களை பொது முகாமையாளரும், அவரின் உதவியாளர்களும் நல்ல முறையில் செயல்படுத்தி வருகின்றார்கள்.

சங்கம் தொடர்ந்து மக்களின் பொருளாதார மேம்பாட்டிற்கு உழைக்க வேண்டுமென்றும், நல்ல அபிவிருத்தித் திட்டங்களை உருவாக்கி மக்களுக்கு சேவையாற்ற வேண்டும் என்றும் வாழ்த்துகின்றேன்.

நன்றி.

இப்படிக்கு,
சி. சபாரத்தினம்
கூ. அ. உத்தியோகத்தர்.

27-8-1976

---



1974ம் ஆண்டு கூட்டுறவு தினவிழாவில் எமது தலைவரும், மாண்புமிகு தபால் தந்தி அமைச்சர் செல்லையா குமாரசூரியர் அவர்களும்.



# புனரமைப்பின் பின் சுன்னுகம் பல. நோ. கூ. சங்கம்

திரு. த. கனகரத்தினம்
(இயக்குனர்சபைச் செயலாளர்)

இச்சங்கம் 1971-ம் ஆண்டு புனரமைப்புக்குப் பின் வலிகாமம் வடக்குப் பல. நோ. கூ. சமாசம் என்னும் பெயருடன் இரண்டு பேரவைத் தொகுதிகளை உள்ளடக்கியதாக இயங்கிக்கொண்டு வந்தது. முன்னர் ஒரு லட்சத்து பதினொராயிரம் கூப்பன்களைக் கொண்டியங்கி வந்தது. புனரமைப்பின் பின்னர் மூன்று சங்கங்களாக மாறி உடுவில் தொகுதியின் ஒருபகுதியை அடக்கி சுன்னுக்ம் பல. நோ. கூ. சங்கம் என்னும் பெயருடன் இயங்கி வருகின்றது.

49000 கூப்பன்களைக் கொண்டதாகவும், 6700 வரை அங்கத்தவர்களைக் கொண்டதாகவும் மாறிய இச்சங்கம் ஆரம்ப காலத்தில் 38 கிளை விற்பனை நிலையங்களையும், ஒரு நெசவு சங்கத்தையும், ஒரு பாண் உற்பத்திநிலையத்தையும், ஒரு கிராமிய வங்கியையும் தன்னகத்தே கொண்டு இயங்கத் தொடங்கியது. 71, 72, 73, 74-ம் ஆண்டு வரை அதிகம் வளர்ச்சி பெறவில்லை. 74-ம் ஆண்டின் ஆரம்ப காலத்திலிருந்து சங்கம் வளர்ச்சியுறத் தொடங்கியது. இதன் அடிப்படையின் இரு புதிய நெசவு நிலையங்களையும் இரு பீடி சுற்றும் நிலையங்களையும், கடுதாசிப் பைகள் உற்பத்தி நிலையம் ஒன்றையும், ஒன்பது நுகர்ச்சிப் பகுதி நிலையங்களையும், எரிபொருள் நிலையம் ஒன்றையும், கிராமிய வங்கி ஒன்றையும், புதிதாக ஆரம்பித்து நடாத்தி வருகின்றது. ஆரம்பத்தில் 100 பணியாளர்கள் வரையில் இயங்கி வந்த ஸ்தாபனம் தற்பொழுது 189 பணியாளர்களை கூட்டுறவு அபிவிருத்தி ஆணைக்குழுவின் அனுமதியிலும் வேலைக்கமர்த்தி செயலாற்றி வருகின்றது. வருடா வருடம் புதிய வேலைத்திட்டங்களை ஆரம்பித்துள்ளது. இவ்வருடத்தில் கலைகலாசாரப் பிரிவு ஒன்றையும் ஆரம்பித்துள்ளது.

ஆரம்ப காலத்திலிருந்து அறவிட முடியாதிருக்கும் பெருந்தொகையான விவசாயக்கடன் அறவிடப்பட்டு வந்துள்ளது. சங்கக் கிளைகளில் ஏற்படும் சோர்வுகள் எல்லாம் கூடிய விரைவில் உள்ளவர்களிடமிருந்து அறவிடப்பட்டு வருகிறது. கிளைநிலையங்களில் முகாமையாளர்கள் விற்பனையாளருக்கு ஊக்கு விப்புச் சம்பளம் கொடுத்து அவர்களை விற்பனையில் முன்னேற்றம் காண வழி வகைகள் செய்து வருகிறது.

இயக்குநர் சபைக் கூட்டங்களும், உபசபைக் கூட்டங்களும் காலத்திற்குக் காலம் தவருது கூடி நடவடிக்கைகள் எடுத்து வருவதும் சங்க வளர்ச்சிக்கு ஒரு காரணமாகும். அத்துடன் விஷேட பொதுக்கூட்டங்களும், வருடாந்தக் கூட்டங்களும் கூடிப் பொதுச் சபைப் பிரதிநிதிகளுக்கு சங்க நிலைமை பற்றி விரிவாக எடுத்துக் கூறப்பட்டு வருகின்றது.

கூட்டுறவுப் பகுதியாரின் விஷேட போட்டிகள் சம்பந்தமான உத்வேகங் களில் கிளைகள் மிகவும் திறமையாகவும் சிறப்பாகவும் இயங்கி வருகின்றன. முகாமைத்துறையின் வழிகாட்டல்களாலும், கிளைக்குழுக்களின் செயற்பாடுகளினு லும் கிளைகளில் துரித முன்னேற்றம் காணக்கூடியதாக இருக்கிறது.

ஏனைய சங்கங்களின் ஊடே ஒப்பு நோக்குமிடத்து எங்களது சங்கம் அவ் வவ் காலங்களில் நடைமுறைப் படுத்த வேண்டியவற்றை உடனுக்குடன் நடை முறைப்படுத்தி வருகின்றது.

விவசாயத்துறையில் சங்கம் பகுதிவாழ் கமக்காரர்களுக்கு வேண்டிய வசதி களையும், கிருமிநாசினி, உரப்பசளை வகைகளையும் காலத்துக்குக் காலம் ஏற்ற வகையில் கொடுத்துதவி வருகின்றது. கிராமிய வங்கிகள் கடன் வசதிகளையும் பவுண் நகைகளை அடைவு பிடித்தல் போன்றவற்றையும் செவ்வனே செய்து வருகிறது.

எமது சங்கம் நாலு லொறிகளைச் சங்கத் தொழிற்பாடுகளுக்கு செயற்படுத்து வதுடன், தனியார் துறையினருக்கும் குறிக்கப்பட்ட காலத்தில் பொருட்களை ஏற்றுமதி இறக்குமதி செய்து அரும்பெரும் சேவையாற்றிவருகின்றது.

ஒப்பந்த வேலைகளை அரசாங்கத்திடமும், திணைக்களங்களிடமும் பொறுப் பேற்று செவ்வனே திறம்பட நடாத்தி வருகிறது.

சங்கம் தொழிற்பாடுகளை மேலும் பல துறைகளிலும் விஸ்தரிக்க ஏற்பாடு கள் செய்வதுடன் சங்க எல்லைக்குட்பட்ட பல தரப்பட்ட தொழிலாளர் அனை வருக்கும் பரவலாக வேலை வாய்ப்பைக் கொடுக்க ஏற்ற முயற்சிகளைக் கை யாண்டு வருகிறது.

வாழ்க கூட்டுறவு !

---

## நன்றி!

**இம் மலர் சிறப்புற உழைத்த அனைவருக்கும் எமது உளம் கனிந்த நன்றிகள்!**

சுன்னுகம்.
30-8-76

மலர்க் குழுவினர்



# கூட்டுறவு ஊழியர் கலாமன்றம்

சுன்னுகம் ப. நோ கூ. சங்கம், சுன்னுகம்.

சர்வதேசக் கூட்டுறவாளர் தின விழாவைக் கொண்டாடிக் கொண்டிருக்கும் நல்ல வேளையில் எமது சங்கத்தின் சேவைகளை நோக்கி, கூட்டுறவு ஊழியர் கலாமன்றம் பெருமையும் பூரிப்புமடைகின்றது. வெறும் பங்கீட்டுப் பொருள்களின் விநியோகத்தோடு மட்டும் நிற்காது எமது சங்கம் கலை கலாச்சார முயற்சிகளில் அதிக அக்கறைகொண்டு செயலாற்றி வருவது கலைஞர்களாகிய எங்களுக்கு மேலும் மகிழ்ச்சியை அளிக்கின்றது. இந்த நாட்டில் ஒரு சமுதாய மாற்றத்தை ஏற்படுத்தி, தேசிய ஒருமைப்பாட்டுக்கு வழிவகுக்கும் பணியில் ஈடுபட்டுழைக்கும் நாம், சுன்னுகம் ப. நோ. கூ. சங்கத்தின் அரும்பணிக்கு என்றும் உறுதுணையாக நின்று ஒத்துழைக்கத் தயங்க மாட்டோம்.

வளரட்டும் மக்கள் கலைகள்!
உயரட்டும் எமது சங்கம்!!

வி. எம். குகராஜா
கலாமன்ற இயக்குனர்

# Design Textiles

23, Model Market, JAFFNA

FOR

BRIDAL REQUIREMENTS
FASHIONABLE TEXTILES
AND FANCY GOODS

தற்காலத்திற்கேற்ற சகலவிதமான

பிடவைத் தினிசுகளுக்கும்
கூறைச்சேலை வகைகளுக்கும்

புகழ்பெற்ற ஸ்தாபனம்

# டிசைன் ரெக்ஸ்ரைல்ஸ்

23, நவீன சந்தை யாழ்ப்பாணம்

தொலைபேசி: 662 Phone: 662

# நல்லதையே செய்யுங்கள்

# හොඳ දෙයක් කරන්න

# DO GOOD

நீங்கள் கொடுக்கும் பணத்திற்குப் பெறுமதியானவை




மில்க்வைற் தயாரிப்புக்களே

மில்க்வைற் தயாரிப்புக்களுக்கு நீங்கள் கொடுக்கும் ஆதரவு

நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு

நீங்கள் கொடுக்கும் ஆதரவாகும்

மில்க்வைற் சவர்க்காரத் தொழிலகம்

யாழ்ப்பாணம்

தொலைபேசி: 7233

யாழ் மெற்றல் உற்பத்திப் பொருட்களான
**அலுமினிய பித்தளைப் பாத்திரங்கள்**

லேக்கவுஸ் பத்திரிகைகள்

தென்னை அபிவிருத்திச் சபையாரால்

அங்கீகரிக்கப்பட்ட பசளை விற்பனையாளர்கள்

# யாழ் மெற்றல்

# விற்பனை நிலையம்

## YARL METAL SALES CENTRE

**6, மக்கள் நவீனசந்தை,** **யாழ்ப்பாணம்**

தொலைபேசி: 7596

உன்னத தயாரிப்பு! நியாய விலை!!

கூட்டுறவு முறையின் ஆக்கப் பயனை அனுபவியுங்கள்

மங்கையரின் மேனியை அழகுறச் செய்யும்

நவீன நைலெக்ஸ் சேலை வகைகள்

ஆடவர் தம்மைப் பொலிவுறக் காட்டும்

புகழ் பொங்கும் சூட்டிங் துணிகள்
பளபளக்கும் பண்கோப் சேட்டுக்கள்

மாண்புறு மக்கள் மகிழ்வுடன் விரும்பும்

உறுதி பெற்ற

கைத்தறிச் சேலைகள்
மணம், குணம், தரம் நிறைந்த
பண்கோப் நல்லெண்ணெய்

சிறந்த வெண்மையும்
பிரகாசமும் தரும்
பண்கோப் நீல சோப்
சுவை மிகுந்த
பாண், பிஸ்கட் வகைகள்

இவைகளையெல்லாம் மக்களுக்காகச் செய்து வழங்கிச்
சேவை புரிவது

# பண்டத்தரிப்புப் பரிஷ்
# ப. நோ. கூ. சங்கம்
## பண்டத்தரிப்பு

தொலைபேசி:
தலைமை அலுவலகம்:
808

தொலைபேசி:
மொத்த விற்பனை நிலையம்
36

யாழ் வாசிகளே!

நீங்கள் இருக்குமிடம் எதுவானாலும் சூழலுக்கேற்ற
வர்ண ஜாலங்கள் புரிவது SUNDELUXE ன்
ஒப்பற்ற வர்ணத்தயாரிப்புகளே!

வர்ணஉலகில் உங்கள் உள்ளங்களில் நீங்காது நிலைநிற்பது SUNDELUXE என்ற சரியான தெரிவே.

இதோ எங்கள் உன்னத தயாரிப்புகளின் அறிமுகம்

- இமல்சன் பெயின்ட்
- இனாமல் பெயின்ட்
- என்டி - கொரோசிவ் பெயின்ட்
- ஒயில் பெயின்ட்
- அலுமீனியம் பெயின்ட்
- வார்னிஸ் வகைகள்

மறக்கமுடியாத பெயர்
மறைக்க முடியாத உண்மை

# "SUNDELUXE"

உங்கள் தேவைகளுக்கு தொடர்பு கொள்க

தயாரிப்பாளர்கள்:-

SUNDELUXE PAINT COMPANY
43, New Moor Street
Colombo - 12

T'phone: 35364 T'Grams: "SUNDELUXE"

அருந்துங்கள்!

# அண்ணு கோப்பி

உடனுக்குடன் உங்கள் முன்னிலையில்

வறுத்து அரைத்துப் பெற்றுக்கொள்ளலாம்

**அண்ணு கோப்பிக் கடை**

**இல. 4 நவீன சந்தை**

**யாழ்ப்பாணம்**

யாழ் மார்க்

சுத்தமான திறம்



# நல்லெண்ணெய்

சுகாதார முறையில் தயாரிக்கப்பட்டது

N. செல்வராசா

சங்கானை கிழக்கு. — பண்டத்தரிப்பு

N. S. சீலைக் கவனித்து வாங்கவும்

**N. S. SPECIAL GINGELLY OIL**

# SUNA MANA SANA

**IMPORTER & EXPORTER**

GUNNY & GENERAL MERCHANTS

**48, 50 K. K. S. ROAD**

**JAFFNA**

*Phone:* 639 *Cable:* "SUNDARAM"



LIBRARY



ஆரோக்கிய வாழ்வின் அதி சிறந்த
ஔஷதங்களான

**பனம் பாணி, பனை வெல்லம்**

ஆகியவை

நவீன முறையில் தயாரிக்கப்பட்டு விற்பனையாகிறது

இன்றே விஜயம் செய்யுங்கள்:

**வலி தென் மேற்கு தெங்கு பனம் பொருள்**
**உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கம்**

சண்டிலிப்பாய்

*Always*

*Look For*

**K. T. I. POPLIN**

**K. T. I. TUSSORE**

**K. T. I. MULL**


**K. T. I. SHEETING**

**Best In Quality**

Sole Distributors:-

# Kundanmals Ltd.

COLOMBO



# 1971-ம் ஆண்டு புனருத்தாரணம் செய்யப்பட்ட பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்


திரு. க. மகாதேவன்
(கணக்காளர்)


1852-ம் ஆண்டில் இங்கிலாந்தில் ஆரம்பிக்கப்பட்ட கூட்டுறவு இயக்கம் உலகின் பல பாகங்களிலும் கைக்கொள்ளப்பட்டு 1911-ம் ஆண்டில் இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட்டது. முதலாவது உலக மகாயுத்தம் காரணமாக அவ்வியக்கம் இலங்கையில் வளர்ச்சியடைய முடியவில்லை. இருந்தபோதும் 1917-ம் ஆண்டளவில் இலங்கையில் கடன் கொடுக்கும் சங்கமாக உருப்பெற்றது. பின்னர் 1943, 44-ம் ஆண்டளவில் பண்டகசாலை இயக்கமாக வளர்ச்சியடைந்தது. 1947, 48-ம் ஆண்டில் விளைபொருள் உற்பத்தி விற்பனவுச் சங்கமாக விரிவடைந்து 1956, 57-ம் ஆண்டில் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கமாகியது. இதுவே இலங்கையில் புனரமைப்புச் செய்யப்படுவதற்கு முன்னர் இலங்கையின் கூட்டுறவு இயக்கத்தின் வரலாற்றுச் சுருக்கமெனக் கொள்ளலாம்.

இதன் பின்னர் 1970—71-ம் ஆண்டில் கூட்டுறவு இயக்கத்தின் வளர்ச்சியைப் பரிசீலித்துப் பார்க்கையில் இவ்வியக்கம் போதிய பலனளிக்காமையினாலும் தளர்ச்சியுற்ற நிலையிலும் இருப்பதை உணர்ந்து இன்றைய ஆட்சியாளர் மக்கள் மத்தியில் கூட்டுறவு இயக்கத்திற்கு வலுவான இடத்தைக் கொடுக்கவும், மக்கள் அதிக அளவில் பயன் பெறவும் புனரமைப்புச் செய்தனர். இதை நாம் ஒரு மைல் கல்லாக வைத்துக்கொண்டு கூட்டுறவு இயக்கத்தை இருகாலங்களாக பிரித்து அறியலாம்.

1. புனரமைப்புக்கு முந்திய கூட்டுறவு இயக்கம்.
2. 1971-ம் ஆண்டிற்குப் பிந்திய நிலை.

புனரமைப்புச் செய்யப்படுவதற்கு முன்பு இலங்கையின் பல பாகங்களிலுமாக ஏறத்தாழ 1500 சங்கங்கள் இயங்கி வந்தன. அப்பெரிய எண்ணிக்கை 1971-ம் ஆண்டிற்குப் பின்பு 365 ஆகச் சுருங்கிக்கொண்டது. எண்ணிக்கையின் சுருக்கமே புரனரமைப்பு என்று தவறுகக் கருதலாகாது.

புனரமைப்புக்கு முன் குறுகிய இடப்பரப்பைக் கொண்டதாக இருந்த சங்கங்கள் பல இயக்கத்தின் நோக்கங்களில் ஒன்ருன நுகர்ச்சிப் பொருட் களைக் கொள்வனவு செய்து வாடிக்கையாளருக்கு வழங்கும் கடமையையே சரி வர நிறைவேற்ற முடியாமல் இடர்ப்பட்டன. அதற்கு அடிப்படைக் காரணம் போதிய பணச் சுற்ருேட்டம் இல்லாமையேயாகும். ஆனல் புனரமைப்புக்குப் பின்பு பல சிறிய சங்கங்கள் ஒன்றிணைக்கப்பட்டு ஆரம்ப சங்கமாக்கப்பட்ட தினல் அங்கத்தவர்களின் பங்கு மூலதனமாக பெருக்கமடைந்தது. சொத்து அதிகரித்தது. வங்கியில் கடன் பெறும் வாய்ப்பு ஏற்பட்டது. அதனல் விற்பனை யில் தனியார் துறையோடு போட்டியிட்டு வெற்றி காண முடிந்தது.

அங்கத்தவர்களின் அங்கத்துவப் பணம் புனரமைப்புக்குப் பின் ரூபா ஒன்று ஆகக் குறைக்கப்பட்டது. பெரிய மறுமலர்ச்சி என்றே செல்லவேண்டும். ஒரு சிலரின் ஏகபோக உரிமையாக இருந்த அங்கத்துவம் பரவலாகப்பட்டு பலதரப்பட்ட மக்களையும் இயக்கத்தில் ஆர்வம் காட்ட ஊக்கியது.

கூட்டுறவுக் கடன் விவசாயிகளுக்கும் தொழிலாளருக்கும் பெருநன்மை புரிந்து வருகிறது சரீரப் பிணையோடு அங்கத்தவர் குறிப்பிட்ட தொகைப் பணத்தைக் குறைந்த வட்டிக்குப் பெற்றுக்கொள்ளும் வாய்ப்பை கூட்டுறவு சங்கமும் மக்கள் வங்கியும் ஒன்றிணைந்து செயற்பட்டு வழங்கும் வழக்கம் புனரமைப்புக்குப் பின் ஏற்பட்ட புதிய மாற்றமாகும்.

சிறிய சிறிய சங்கங்களாக இயங்கிவந்தபொழுது அங்கத்தவர்களின் உற்பத்தி பொருட்களைச் சந்தைப்படுத்துவதில் பல தடைகள் ஏற்பட்டன. அச்சங்கங்களுக்குப் போதிய சந்தைப் படுத்தக்கூடிய உற்பத்திப் பொருள் கிடைக்காமை, நல்ல சந்தையை வெளியாருடன் போட்டி போட்டுப் பெற முடியாமை கூடிய பணியாளரை வேலைக்கு அமர்த்தி சேவையை பெற முடியாமை, போக்குவரத்து செலவுகள் அதிகரித்தமை இத்தகைய இடையூறு களினற் இத்தொழிலை செய்யமுடியாமற் போய்விட்டது. ஆனல் பல சங்கங்கள் ஒருங்கிணைந்து புணருத்தாரணம் செய்யப்பட்ட பின்பு திறமையான கட்டிட வசதிகளை ஏற்படுத்திக் களஞ்சியப் படுத்தவும், சந்தைப்படுத்துவதில் திறமை வாய்ந்த ஊழியர்களை வேலைக்கு அமர்த்திக் கூடிய சேவையை பெறவும் போக்கு வரத்து வசதியைக் குறைந்த செலவில் ஏற்படுத்தவும் அதனல் அங்கத்தவர் களின் உற்பத்திக்கு நல்ல சந்தையை ஏற்படுத்தவும் உதவி செய்தன.

இதுவரை காலமாக உள்ளூர் மூலவளங்களையும் மனித சக்தியையும் ஒன்று திரட்டிக் கிராமிய மட்டத்தில் பொருளாதாரத்தை வளர்க்கக் கூட்டுறவு இயக்கம் பெரும்பாலும் உதவவில்லை. ஆனல் இன்றைய ஆட்சியாளர் இந்நாட்டின் பொருளாதாரத்தைக் கிராமிய மட்டத்தில் வளர்த்துத் தேசிய மட்டத்திற்கு உயர்த்த விரும்பிய ஐந்தாண்டு திட்டத்தில் கூட்டுறவு இயக்கத் திற்கு இடம் கொடுத்து கூடிய நிதியை ஒதுக்கீடு செய்வதற்கு 1971-ம் ஆண்டு பல நோக்கு கூட்டுறவு சங்கங்களைப் புணருத்தாரணம் செய்தனர். அதனல் கூட்டுறவுச் சங்கங்கள் பிரதேச அபிவிருத்தி சபையுடன் இணைந்து தற்பொழுது பனங்கட்டி செய்தல், கருப்பஞ் சீனி செய்தல், கொப்பி கட்டுதல் போன்ற கைத்தொழில்களைச் செய்து வருகின்றனவென்ருல் அது மறு சீரமைப்பின் பயன் எனக் கூறுவதில் வியப்பில்லை.

ஏழை எழியவர்கள் முன்னேறவும் அதன் மூலம் இந்நாட்டின் பொருளா தாரத்தைப் பெருக்கவும் புணருத்தாரணம் உதவி செய்து வருகிறது, வளர் கிறது.

வளர்க கூட்டுறவு.

# எமது சங்கமும் நுகர்ச்சி விநியோகமும்



திரு. ந. சிவலிங்கம்
முகாமையாளர் (நுகர்ச்சி விநியோகம்)

மனிதர்களுக்கு நாளாந்தம் அத்தியாவசிமாகத் தேவைப்படுவன வற்றில் பிரதானமானவை உணவும் உடையுமாகும். இந்த உணவும் உடையும் எமது சங்கப் பரப்பில் இருக்கும் மக்களுக்கு சங்கங்கள் புனரமைக்கப்பட்ட காலத்தில் 26 நுகர்ச்சிப்பொருள் விற்பனைக் கிளைகள் ஊடாகவும், 4 புடவை விற்பனை நிலையங்கள் ஊடாகவும் விநியோகிக்கப்பட்டு வந்தன. இந்த 30 விற்பனை நிலையங்களினுலும் சங்கங்கள் ஒருங்கிணைக்கப்பட்ட நோக்கங்கள் நிறைவேற்றப்படாததினுல் பாவனையாளரின் வசதிக்கு ஏற்ப 9 நுகர்ச்சி விற்பனைக்கிளைகளும், 1 புடவை விற்பனை நிலையமும் திறக்கப்பட்டு சேவையாற்றி வருகின்றன. இவைகளை விடவும் இன்னமும் விற்பனைநிலையங்கள் திறப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. எமது சங்கத்துடன் 16 உத்தரவு பெற்ற வியாபாரிகள் இணைக்கப்பட்டுள்ளார்கள். அத்துடன் சுமார் 50000 கூப்பன்களை எமது சங்கம் கொண்டிருக்கிறது. கூப்பன் தொகையைப் பொறுத்தவரையில் எமது சங்கம் யாழ் குடாநாட்டில் 2வது இடத்தைப் பெறுகிறது.

## உணவுப் பொருள் விநியோகம்:

உணவுப் பங்கீட்டுப் பொருட்களை பாவனையாளருக்கு இலகுவிலும் நேர காலத்துடனும், கிளைகளில் பெற்றுக்கொள்ளும் நோக்குடன் 1973ம் ஆண்டு வரை இரவு 8 மணிவரை நடைபெற்ற பொருள் விநியோகத்தில் ஏற்படுத்தப்பட்ட மாற்றங்கள் காரணமாக நண்பகல் 12 மணிக்கு

முன்பே பங்கீட்டுப் பொருட்கள் கிளைகளுக்கு அனுப்பி வைக்கப்படுகின்றன. திங்கட்கிழமைகளில் காலை 8-30 மணிக்கு ஆரம்பிக்கப்பட்ட பொருள் விநியோகம் தற்பொழுது அதிகாலை 6 மணிக்கு ஆரம்பிக்கப்பட்டு வருகின்றன. பொருள் விநியோகத்தில் ஏற்படுத்தப்பட்ட தாமதத்தால் கிளைகளின் ஒருநாள் விற்பனை நடைபெருது இருந்து வந்தது. நண்பகல் 12 மணிக்கே பொருள் விநியோகம் முடிவடைவதால் சகல கிளைகளிலும் பொருள் விநியோக நாளன்றே வியாபாரம் நடைபெற்று வருகின்றன. புடவை விநியோகத்தைப் பொறுத்தவரையில் பாவனையாளரின் திருப்திக்கு ஏற்ப பிரதான ஐந்து புடவை விற்பனை நிலையங்களூடாக விற்பனை நடைபெற்று வருகிறது. எந்தவொரு தட்டுப்பாடான அருமையான புடவைகளின் விநியோக முறையும் பாவனையாளருக்கு முன் கூட்டியே விளம்பரப்படுத்தி அவர்களின் திருப்திக்கு ஏற்பசெயல் படுத்தப்பட்டு வருகின்றது.

## கட்டட இரும்புப் பொருட்கள்:

மேற்படி பொருட்கள் எமது ஒரேயொரு விற்பனை நிலையமூடாக விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. வெளிச்சந்தையில் கட்டிடப் பொருட்களின் விலைகள் விஷம்போல் ஏறியபொழுதிலும் நாம் அவற்றை நியாயமான விலையில் உண்மையான பாவனையாளர்களுக்கு விநியோகித்து வருகின்ரேம். கட்டட இரும்புப்பொருள் விற்பனை நிலையம் ஒன்று மிக விரைவில் இணுவிலில் திறக்கப்படவிருக்கிறது, இதன் மூலம் கட்டட இரும்புப் பொருட்கள் பரவலாக்கப்பட்டு பவனையாளர் இலகுவில் பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்புக்கள் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன.

## எரிபொருள் நிரப்பு நிலையம்:

சுன்னுகத்தில் தனியார் கையிலிருந்த எரிபொருள் நிலையம் 1975ம் ஆண்டு ஆடி மாதம் 2ந் திகதி எமது சங்கத்தினுல் பொறுப்பேற்கப்பட்டது. இந்த எரிபொருள் - நிலையம் பொறுப்பேற்கப்பட்டதன் நோக்கம் விவசாயிகள் இலகுவில் எரிபொருட்களை கொள்வனவு செய்வதற்கேயாகும். உண்மையில் இந்நிலையம் பொறுப்பேற்கப்பட்ட பின்பு விவசாய இரசாயன கிருமிநாசினி விற்பனை வருமானத்தை இழந்தும் அப்பகுதியால் சங்கத்திற்குக் கிடைத்த இலாபத்தை இழந்தும், விவசாயிகள் நன்மை பெறவேண்டுமென்ற நோக்குடனே மேற்படி நிலையம் இலாபம் குறைந்த நிலையிலும் நடாத்தப்பட்டு வருகின்றது. கடந்த சில மாதங்களாகமண்ணெய் விநியோகத்தைப் பொறுத்தவரையில் யாழ் மாவட்டத்தில் ஏற்பட்ட தட்டுப்பாடு நிலை காரணமாக விவசாயிகளின் பயிர்கள் அழியும் நிலையிலிருந்தும் அவற்றை அழியவிடாமல் விவசாயிகளுக்கு ஊக்கம் கொடுக்கும் நோக்கமாக சங்கம் பெரும் நட்டத்தை ஏற்று எமது லொறிகள் மூலம் கொழும்பில் இருந்து மண்ணெய் ஏற்றி இறக்கி விநியோகித்து வருகின்றது.

எமது தொழிற்பரப்பில் எமது எரிபொருள்நிலையத்தை விட மேலும் மூன்று எரிபொருள் நிலையங்கள் இருந்தும் அப்பகுதியிலிருக்கும் எமது கிளைகளுக்குக்கூட மண்ணெய் விநியோகத்தைப் பரவலாக்கி சீரான முறையில் விநியோகித்து வருகின்றோம். குறிப்பாக திடற்புலம், ஈவினை, புன்னாலைக்ககட்டுவன் பகுதியில் ஓர் எரிபொருள் நிரப்புநிலையம் தனியார் கையிலிருந்தும் நாம் அப்பகுதியிலுள்ள விவசாயிகளுக்கு அப்பகுதிக் கிளைகள் ஊடாக மண்ணெய் விநியோகித்து வருகின்றோம். அப்பகுதிக் கிளைகளுக்கு மண்ணெய் விநியோகிப்பதால் சங்கத்திற்கு நட்டமேயொழிய இலாபம் சிறிதும் இல்லையென்பதை நான் இங்கு குறிப்பிட விரும்புகிறேன். இதேபோல்தான் உடுவில் இணுவில் பகுதிகளிலும் தனியார் எரிபொருள் நிரப்பு நிலையம் இருந்தும் அப்பதி மக்களுக்கு மண்ணெய் விநியோகம் செய்து வருகின்றோம். எனவே மண்ணெய் விநியோகத்தைப் பொறுத்தவரையில் சங்கம் சேவை செய்கிறதேயன்றி, இலாபத்தை நோக்கமாகக்கொள்ளவில்லை. இதேபோலத்தான் எஞ்சின் ஓயில் விற்பனையும் விவசாயிகள் நன்மை கருதி பரவலாக்கப்பட்டுள்ளது.

லொறிசேவை:

எமது சங்கத்தில் நான்கு லொறிகள் இருந்தும் மூன்று லொறிகளே சேவையில் ஈடுபடுத்தக்கூடிய நிலையிலுள்ளன. லொறிகளின் உத்தரவாதம் முடிவடைந்து இருப்பதால் அவற்றின் பராமரிப்புச் செலவுகள் அதிகரித்தபொழுதிலும் மேற்குறிப்பிட்ட சேவைகளைக் காலத்திற்குக் காலம் தேவைக்கேற்பச் செய்து முடிப்பதற்கு இவற்றின் தேவை சங்கத்திற்கு இன்றியமையாததாகின்றது. சங்கச் சேவை மட்டுமல்ல. விவசாயிகளின் உற்பத்திப்பொருட்களில் பெரும்பங்கு எமது லொறிகள் மூலமே சந்தைப்படுத்துவதற்கு இவை உதவி புரிகின்றன. மேலும் இவ்வருட இறுதியில் சங்கம் ஓர் புதிய லொறியைக் கொள்வனவு செய்வதற்கான வாய்ப்புக்கள் கிடைத்துள்ளன.

இதுவரையில் கூறியவற்றிலிருந்து நுகர்ச்சிப் பகுதியைப் பொறுத்தவரையில் பாவனையாளர்களுக்கு முன்னைய காலங்களைவிட அதிக சேவையாற்றிவருகிறது. அத்துடன் சங்கச் சொத்துக்களின் சுரண்டல்களுக்கும், மோசடிகளுக்கும் முற்றுப்புள்ளி வைக்கும் நோக்கமாக இத்தகைய செயல்களில் ஈடுபடும் பணியாளரகளின் மீதும் உடனுக்குடன் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. அரசாங்கம் சங்கங்களை புனரமைக்கப்பட்டதன் நோக்கத்திற்கமைய எமது சங்கம் அதில் பெரும்பங்கை ஆற்றி நிறைவேற்றி வருவதில் நாம் பெருமையடைகின்றோம்.

# கூட்டுறவு இயக்கத்தில் ஊழியர்களின் பங்கு

திரு. சி. செல்வராசா
தொழிலாளர் இயக்குனர்சபைப் பிரதிநிதி

பட்டொளி வீசிப் பறக்கின்றது கூட்டுறவு இயக்கக் கொடி அதிகாலையில் காட்சியளிக்கும் சூரியன் தரும் ஏழு நிறங்கள் கூட்டுறவு இயக்கக் கொடியில் காட்சி தருகின்றன. இந்த ஏழு நிறங்களும் சுழற்சியால் ஒரே நிறமாக வெண்மையாகக் காட்சியளிக்கும். பல்வேறு வகைப் பட்ட மக்களும் தங்களின் பொருளாதாரத் தேவைகளை நிறைவேற்றும் பொருட்டுச் சுயேச்சையாக ஒன்றிணைவதே கூட்டுறவு இயக்கமாகும். கூட்டுறவு அமைப்புக்கள் சிற்றளவில் ஆரம்பிக்கப்பட்டு பேரளவு அமைப்புக்களாக வளர்ச்சியடைந்துள்ளன.

மேலளவு அமைப்புக்களாக வளர்ந்துள்ள கூட்டுறவு இயக்கம் சீரிய முறையில் இயங்க மூன்று பகுதியினரின் உழைப்பும், ஒத்துழைப்பும் வேண்டும். அம்மூன்று பகுதியினர் அங்கத்தவர்கள், நிர்வாகக் குழுவினர், ஊழியர்களாவர். இம் மூன்று பகுதியினரும் தங்கள் கடமைகளை இதய சுத்தியுடன் நிறைவேற்றினுல்தான் கூட்டுறவு இயக்கம் வளர்ச்சியுறும், மேன்மையடையும். கூட்டுறவு இயக்கத்தை வளர்க்க மூன்று பகுதியினர் இருந்தாலும் முக்கிய பங்கும் பொறுப்பும் உடையவர்கள் கூட்டுறவு ஊழியர்கள் ஊழியர்களின் மனப் பாங்கு, ஆர்வம், உழைப்புத்திறன், சேவை மனப்பான்மை, நேர்மை என்பவற்றின் அடிப்படையிலேயே கூட்டுறவு இயக்கம் பெரும்பாலும் வளர்ச்சியடைய முடியும்.

அங்கத்தவர்கள் பெரும்பாலும் தமது பொருளாதாரத் தேவைகளை நிறைவேற்ற வேண்டிய சந்தர்ப்பங்களில் மட்டும் கூட்டுறவு இயக்கத்தை நாடுகிறுர்கள், ஏனைய காலங்களில் அவர்களின் சிந்தனையும் செயலும் தமது சொந்த முயற்சிகளில் செலுத்தப்படுகின்றன. நிர்வாகக் குழுவினரும் வாரத்திலோ, அல்லது மாதத்திலோ சில மணித்தியாலங்களைத்தான் கூட்டுறவு இயக்கக் கருமங்களைப் பற்றி சிந்திக்கச், செயல்ப்படுத்தச் செலவிடுகின்றனர். ஆனுல் ஊழியர்கள் முழு நேரமும் கூட்டுறவுக் கருமங்களுக்காகத் தம்மை ஈடுபடுத்தகிருர்கள், எனவே கூட்டுறவு இயக்கத்தின் ஊழியர்களின் பங்கு மிக முக்கியமானது.

ஒரு ஊழியன் கூட்டுறவு இயக்கத்தில் அங்கத்தவனுக இருந்தால் அவன் ஊழியனுடைய கடமைகளையும், அங்கத்தவனுடைய கடமைகளையும், ஒரே நேரத்தில் நிறைவேற்ற வேண்டியவனுக இருக்கிருன். நிர்வாகக் குழுவினர் இயக்கம் சம்பந்தமான தீர்மானங்களை நிறைவேற்றுவதற்கு வேண்டிய தகவல்களையும், ஆலோசனைகளையும் வழங்குகிருன். நிர்வாகக் குழுவின் தீர்மானங்களைச் செயற்படுத்த வேண்டிய செயல்களை எல்லாம் செய்கிருன். அவை கூட்டுறவு இயக்க ஊழியர்கள் தமது கட

மைகளைச் செய்யும் அதே நேரத்தில் அங்கத்தவர்களின் கடமைகளையும், நிர்வாகக் குழுவின் கடமைகளை நிறைவேற்றுவதற்கு வேண்டிய உதவிகளையும் செய்கின்றார்கள். எனவே கூட்டுறவு இயக்கத்தில் ஊழியர்களின் பங்கு முக்கியமானது மட்டுமல்லப் பொறுப்பானதுங்கூட.

கூட்டுறவு ஊழியன் ஒரு இயந்திரமல்ல அவனும் மனிதன். அவனுக்கும் சாதாரண மனிதனுக்குள்ள நியாயமான தேவைகள் உண்டு. சாதாரண மனிதனின் விருப்பு வெறுப்புக்களும் உணர்ச்சிகளும் உண்டு. அவன் மாசு மறுவற்ற அவதார புருடனல்ல. தவறுகள் பிழைகள், குற்றங்கள் விட்டு பிரியாத மகாத்துமாவும் அல்ல. அவனும் உங்களைப் போன்ற மனிதன்தான் உங்களிடம் உள்ள குறை, நிறைகள் அவனிடமும் உண்டு. உங்களுக்குள்ள பலவீனங்களும், உறுதித் தன்மைகளும் அவனிடமும் இருக்கின்றன.

எனவே சாதாரண மனிதனிடம் உள்ள உணர்வுகளை சக்திகளை எவ்வாறு கூட்டுறவு இயக்க வளர்ச்சிக்குப் பயன் படுத்தக் கூடிய சூழ்நிலைகளை உருவாக் முனைவோமோ, அதே போன்று கூட்டுறவு ஊழியர்கட்கும் நல்ல சூழ்நிலைகளை உருவாக்கிக் கொடுத்தல் வேண்டும். அங்கத்தவன் தனது பொருளாதாரப் பிரச்சினைகட்கு தீர்வு காண்பதற்குக் கூட்டுறவு இயக்கம் உதவும் என்று எண்ணுகிறோமோ அதே போன்ற எண்ணம் கூட்டுறவு ஊழியர்கட்கும் ஏற்பட வேண்டும்.

கூட்டுறவு தனது வாழ்க்கைப் பிரச்சினைக்குத் தீர்வு காணும், தமது பொருளாதார நிலையை உயர்த்தும், சீரிய வாழ்வைத் தரும், தமது சிக்கல்களை விடுவிக்கும் என்ற எண்ணத்தைக் கூட்டுறவு ஊழியர் உள்ளத்தில் பதியவைக்க வேண்டிய பொறுப்பும், கடமையும் அங்கத்தினர்கட்கும் சிறப்பாக நிர்வாக அங்கத்தவர்கட்கும் உண்டு. இவ்வித சூழ்நிலையை உருவாக்கினால்தான் கூட்டுறவு ஊழியர்களின் முழுத் திறனையும், பயன்படுத்திக் கூட்டுறவு இயக்கத்தை வளர்க்க முடியும். கூட்டுறவு ஊழியர்கள் கூட்டுறவு இயக்கத்தை வளர்க்க வேண்டிய சூழ்நிலைகளை உருவாக்க வேண்டும். சமுதாயமும் கூட்டுறவு ஊழியர்களின் உழைப்பை உணர்ந்து உரிய மதிப்பை அளிக்க வேண்டும்.

கூட்டுறவு ஊழியர்கள் பணத்துக்குத் தமது உழைப்பை விற்பவர்களாக மட்டும் எண்ணக் கூடாது ஒரு இயக்க வழர்ச்சிக்குத் தமது உழைப்பை அர்ப்பணிப்பவர்களாகக் கருத வேண்டும். சேவை மனப்பான்மை வேண்டும். கூட்டுறவு வழர்ச்சி தமக்கு மட்டுமல்ல தம்மைப் போன்ற பல்லாயிரக்கணக்கான மக்களின் வாழ்வு மலர வழிகாட்டும். கூட்டுறவு இயக்க வளர்ச்சியின் பாதிப்புத் தம்மை மட்டுமல்ல பல்லாயிரக் கணக்கான மக்களின் வாழ்வைப் பாதிக்கும். எனவே கூட்டுறவு இயக்க வழர்ச்சியில் தமது பங்கு பொறுப்பானது, அதைச் சரியாக நிறைவேற்ற வேண்டும் என்ற எழுச்சி மனப்பான்மையோடு செயலாற்ற வேண்டும். புதிய சமுதாயம் ஒன்றை கூட்டுறவு முறையில் அமைக்கும் பெரும் பணியில் ஈடுபட்டிருக்கும் கூட்டுறவு ஊழியர்கள் தமது பணியை விரைவில் பூர்த்தி செய்வார்களென நம்புகிறேன்.

# வாழ்த்துச் செய்தி




திரு. சி. சிவஞானம் (சுசிதர்)

கலாச்சார உத்தியோகத்தர்

(சுன்னுகம் ப. நோ. கூ. சங்கம்)


பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் என்பது அரிசி, மா, சீனி கொடுக்கும் ஒரு நிறுவணம் அல்ல, கூட்டுறவு என்பது மனித வாழ்வின் நியாய பூர்வமான சகல தேவைகளையும், நிறைவேற்றும் ஒரு பாரிய இயக்கமாகும், இந்த இயக்கமே தர்மநெறியை நிலைநாட்டும் பாதையின் பிரதான படியாகும். அதாவது கூட்டுவு இயக்கம் சமதர்ம சமுதாயத்தின் முதற்படியாகும். தர்மநெறியை அதாவது சோசலிச நெறியை செயற்படுத்தும் அல்லது சோசலிச பாதையில் மக்களை அழைத்துச் சென்று சீரிய அல்லது வீரிய நிலைக்கு பக்குவப்படுத்துவது கூட்டுறவு இயக்கம் என்பது, மறுக்கமுடியாத மாபெரும் உண்மையாகும்.

மேற்படி சிந்தனைகளை நமது நாட்டில் சிந்திப்பதற்கோ அன்றி வழிவிட்டு தந்தமைக்கோ உரிய பெருமை எமது ஐக்கிய முன்னணி அரசையே சாரும்.

குறுகிய சில சேவைளுடனேயே நின்று மக்களின் சிந்தனைகளை கட்டுப்படுத்தாமல், எமது சங்கமும் தமிழ் கலைகலாசாரங்களுக்கு புத்தூக்கம் கொடுத்து கேட்பாரற்று சோர்ந்து கிடக்கும் கலைஞர்களுக்கு நம்பிக்கை கொடுத்து இயன்றளவு எல்லாவிதமான ஆதரவையும் கொடுத்து, அவர்களை காப்பாற்றும் முகமாகவும், ஏற்றத்தாழ்வற்ற நாடுகளில் உள்ளது போன்ற "கலைஞர்கள் கூட்டுறவு சம்மேளனம்" போன்ற ஒரு நிலையை எதிர்காலத்தில் எமது நாட்டிலும் ஏற்படுத்துவதற்கு முதல்படியாகவும் அமைய, கலை கலாசாரத்திற்கென ஒரு தனிப் பிரிவை ஆரம்பித்த எமது உணர்ச்சி பூர்வமான உறுதிமிக்க தலைவருக்கும் மற்றும் நிர்வாகஸ்தர்களுக்கும் உரிய அதேவேளையில், இதற்கு வழிவிட்டு தந்த பெருமை எமது ஐக்கிய முன்னணி அரசை சாரும் என்பதை இங்கு குறிப்பிடாமல் இருக்க முடியாது.

முன்னின்று முற்போக்கு செய்யும் இன்றைய அரசிற்கு கூட்டுறவாளர்கள் நன்றிக்கடன் பட்டவர்களாவார்கள்.

"கலைஞர்களும் கூட்டுறவாய் வாழ்வோமாக."

*With Best Compliments*

*of*

# MASCONS LIMITED

175 Armour Street — COLOMBO 12

**MANUFACTURERS OF I. D. L. WIRE NAILS, PANEL PINS & STAPLES**

*With Best Compliments*

*from*

# S. Sinnathurai & Bro.

**No 39, K.K. S. Road** — **JAFFNA**

Tel: 284

Grams: **KALKI**

DISTRIBUTORS:

M/s. British Ceylon Corporation Ltd.
M/s. J. L. Morrison Son & Jones Ltd.
Bata Shoes

விவசாயிகளை பெருமகிழ்ச்சியுடன் வரவேற்கின்றது

புத்தூர்

## கமத்தொழில் விளைவுப் பெருக்கக் குழு

எம்மிடம் பெற்ரோலியக் கூட்டுத்தாபனத்தின் சகலவிதமான
விவசாய கிருமிநாசினி வகைகளும், மற்றும் ஐ. சி. ஐ.
அல்க்கத்தீன் பைப் வகைகளும், நீர்இறைக்கும்
இயந்திர உப உறுப்புக்களும் பெற்றுக்கொள்ளலாம்.

**கமத்தொழில் விளைவுப் பெருக்கக் குழு, புத்தூர்**

# எமது பணி

SITHY VINAYAGAR
ALAI WEST
CHUNNAKAM
LIBRARY

திரு. தா. சண்முகநாதன்
பொதுசன தொடர்பு உத்தியோகத்தர்,
சுன்னுகம் ப. நோ. கூ. சங்கம்.

காலையில் எட்டு மணிக்கு எனது மேசைகளைத் துடைத்துக் கொண்டு எனது வேலையைத் தொடங்குகிறேன். தொலைபேசி மணி அடிக்கின்றது எடுத்து "கலோ" என்கின்றபோதே அடுத்த பக்கத்திலிருந்து "லைன் செக் பண்ணினனுங்கள்" என்று சொல்லுகிருர்கள். மேசை முன்பாக இருவர் வந்து நிற்கின்ருர்கள். நிமிர்ந்து பார்க்கின்றேன் "சீமேந்துப் பெர்மிட்" என்கிருர்கள். சீமேந்து முடிந்து விட்டது இனி அடுத்த வாரம் தான் தருவார்கள். செவ்வாய்க்கிழமை வாருங்கள் என்று சொல்லுகிறேன். அங்கு வேறு சிலருக்குக் கொடுப்பதைக் கண்டதாகச் சொல்லுகின்ருர்கள். இது முன்பு கொடுத்த ஓடர் இனி செவ்வாய்க்கிழமைதான் இது எனது பதில் - நாங்கள் பொது முகாமையாளரைக் காண வேண்டும்.

பொது முகாமையாளரைச் சந்திக்கவேண்டாம். இந்த அறையில் இரண்டாவது மேசையில் இருப்பவரைச் சந்தியுங்கள் என்று சொல்லி அவர்களுக்கு அறையைக் காட்டுகிறேன் கொன்சியுமர் மனேஜருடைய மேசையைச் சுற்றி ஏற்கனவேயே நிற்பவர்களுடன் இவர்களும் போய்ச் சேர்ந்து கொள்கின்ருர்கள். எனது தொலைபேசி அலறுகிறது. சன் சீமேந்து இல்லையென்று சொன்னுனெல்லே பேந்து ஏன் ஆக்களை உலைக்கிறீர்? "அவர்களுக்கு ஏற்கனவே நான் சொன்னனுன். அவர்கள்தான் கேட்காமல் உங்கை வருகினம்". தயவு செய்து 'பிளீஸ்' வாறவைக்குச் சொல்லி அனுப்பும். கொன்சுமரை நினைக்க எனக்குப் பரிதாபமாகவிருக்கிறது.

என் மேசைக்குப் பக்கத்திலுள்ள ஆலோசனைப் பெட்டியைக் குலுக்கிப் பார்க்கின்றேன். அது வழக்கம்போல் வெறுமனே கிடக்கின்றது. மக்கள் தெருவிலே சொல்லுகின்ருர்களேயொழிய எழுதிப்போடும் பழக்கம் இல்லை. கருணுகரன் கடிதங்களையும் பதியும் புத்தகத்தையும் மேசையில் வைக்கின்ருர். விலாசங்களைச் சரிபார்த்துவிட்டு கடிதங்களை உடைக்கின்றேன். "எஸ்கியூஸ்மீ" வந்தவரைப் பார்க்கின்றேன் தலைவர் இன்று வருவாரா? நிச்சயமாகச் சொல்ல முடியாது புதன் கிழமை மூன்று மணிக்கு நிச்சயமாகச் சந்திக்கலாம் அன்றைக்கு பொது மக்களைச் சந்திக்கும் தினம். அவசரமாக விருந்தால் எழுதித் தாருங்கள் நான் அவரிடம் வந்தால் சேர்ப்பிக்கின்றேன்.


நான் கடிதங்களை உடைத்துக்கொண்டே பதில் சொல்லுகின்றேன். நேசராசா "காட்ட" கொண்டுவந்து மேசையில் வைக்கின்ருர். சிறு பனங்கட்டித்துண்டு அரைக்கிளாஸ் "காட்ட" விற்குத்தான் போதுமானதாக விருந்தது. மிகுதியை கோல்சேலில் உள்ள சீனி மூட்டைகளை நினைத்துக்கொண்டு குடித்து முடிக்கின்றேன். அது எனக்குச் சொந்தமில்லையே. கடிதங்களைப் பார்த்துகொண்டிருக்கும்போதே பல குறுக்கீடுகள். தொலைபேசி அடிக்கின்றது கலோ கெட்மீ தெல்லிப்பழை பொது முகாமையாளரின் பணிப்பு தெல்லிப்பழை யூனியனேடு அவரைத் தொடர்பு படுத்துகிறேன். உங்களின்ரை கூட்டுறவுவிழா எப்போ இது முன்னுலுள்ளவரது விசாரணை. 4-ந் திகதி சொல்லிமுடித்துவிட்டு கடிதங்களை எடுத்துக்கொண்டு பொது முகாமையாளரிடம் செல்லுகின்றேன். வழியில் ஒருவர் மறிக்கின்ருர். தியாகுவைக் காணவேண்டும் வாங்கிலை இருங்கோ, வரச்சொல்லுறன்.

தலைவரின் அறையிலிருந்து ஓசை வருகின்றது. நேரத்தைப் பார்க்கின்றேன். பன்னிரண்டரை மணி. இன்றைக்குச் சாப்பாட்டுக்கு அரோகராதான். எனக்குள் நினைத்துத்துக்கொள்கிறேன். தூங்கிக் கிடந்த தொலைபேசி இயங்கத்தொடங்குகிறது. கூட்டுறவு ஆணையாளர், அரசாங்க அதிபர், ப. நோ. கூ. சங்கத்தலைவர்கள் ஆகியோரின் இலக்கங்களை பதிந்து கொண்டு தொடர்பு படுத்துகிறேன். தலைவரைக்காண வந்தவர்களை ஒவ்வொருவராக உள்ளே அனுப்புகிறேன். புகார்கள் ஆலோசனைகள், வேலைகள் கேட்டுவந்தவர்கள் இப்படிப் பலர். அனுப்ப வேண்டிய கடிதங்களை என்னிடம் தருகின்ருர். தலைவருக்கு வரும் தொலைபேசித் தொடர்புகளை அவருக்குக் கொடுக்கின்றேன். பொது முகாமையாளரின் அழைப்பு வருகின்றது. கூட்டுறவு விபர அழைப்புக்கள் அனுப்பிவிட்டீரா? கொடிகள் கட்டியாகிவிட்டதா. இப்படிக் கேள்விகள் பல. செல்வரத்தினத்தைக் காண வேண்டும். எந்தச் செல்வரத்தினம். ஏழாலையென்று வந்தவர் சொல்கின்ருர். இருவர் ஏழாலையிலிருந்து வருகிருர்கள் இதில் யாரைக் கேட்கின்றீர்கள்? இணுவிலுக்குச் சேர்மதியானவர் உடனே அவரிடம் அழைத்துச் செல்கின்றேன். நேரம் ஐந்து மணி தலைவரைப் பார்க்கின்றேன். உப சபைக் கூட்டம் நடக்கின்றது. இன்று வீடுபோன பாடில்லை. இந்நினைவுகளோடு கதிரையில் அமர்கின்றேன். மீண்டும் கடிதங்களுக்குப் பதில் தொலைபேசித் தொடர்புகள். இரவு ஒன்பது மணிக்கு தலைவர் தனது அறையிலிருந்து வெளியேறுகின்ருர். நானும் எனது சயிக்கிளை, இறுக்கி வீட்டை நோக்கி மிதிக்கின்றேன். 'கூட்டுறவுக் கள்ளர்' யாரோ தூரத்தில் சொல்லுவது கேட்கின்றது.

நன்றிகெட்ட சமுதாயம்!



எமது தலைவர் திரு. குமாரசாமி விநோதன் அவர்கள்



மக்கள் சீனத்தில் எமது தலைவரும் ஸ்ரீ. ல. சு. கட்சி வாலிப முன்னணித் தலைவர் திரு. அனுரா பண்டாரநாயக்கா அவர்களும்

# சுன்னுகம் பல நோக்குக்
# கூட்டுறவுச் சங்கம் (வரையுள்ளது) சுன்னுகம்

சுன்னுகம் பல நோ. கூ. சங்கம் யாழ் குடாநாட்டின் பெரியதோர் தொழிற்பரப்பான சுன்னுகம் பட்டினசபை, ஏழாலை உடுவில் கிராம சபைகளை உள்ளடக்கிய 49.000 மக்களது அன்ருட வாழ்க்கைத் தேவைகளைப் பூர்த்தி செய்வதிலும், பொருளாதார வளங்களைப் பேணுவதிலும் சிக்கன சேமிப்புத் திட்டங்களைக் கடைப்பிடிப்பதிலும், வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்குவதிலும் முன்னணியில் நின்று:

1. 49 கிளைகள் மூலமாகப் பாவனையாளர்களின் பங்கீட்டுப் பொருள் விநியோகத்தில் தன்னிகரற்று விளங்குகின்றது.

2. கட்டிடப் பொருட்களை மலிவானவிலையில் விற்பனை செய்கின்றது.

3. விவசாயத்திற்குத் தேவையான பொருட்களைத் தரமாக விநியோகிக்கின்றது.

4. வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்குவதற்காகக் கைத்தொழிற் பாடுகளான பீடி உற்பத்தி நிலையம், பாண் உற்பத்தி நிலையம், கடதாசி உற்பத்தி நிலையம், நெசவு நிலையம், கட்டிட ஒப்பந்த வேலைகள், லொறிச் சேவைகள் ஆகியவற்றைத் தொழிற்படுத்துகின்றது.

5. சிறுவர் பாடசாலைகளையும் ஆங்காங்கே அமைத்து, சிறுவர்களின் கல்வி வசதியையும் செய்துகொடுத்து வருகின்றது.

6. மண்ணெய், பெற்ரேல் விநியோகத்துக்காக ஓர் எரிபொருள் நிலையத்தைச் சிறப்பாக இயக்கி வருகின்றது.

7. கிராமிய வங்கிகள் ஊடாக மக்களுக்குத் தேவையான கடன் வசதிகளைப் பூர்த்தியாக்குவதுடன், இன்னும் இன்னேரன்ன ஆக்க வேலைகளையும், திட்டங்களையும் தன்னகத்தே உள்ளடக்குகின்றது.

8. ஏனைய சங்கங்களுக்கு முன்மாதிரியாக மறைந்து கிடந்த எமது கலை கலாச்சாரத்திற்குப் புத்துயிர் கொடுத்து, முன்னணியில் சிறந்து விளங்குகின்றது.

"மக்களின் தேவைகளே!

சுன்னுகம் பல நோ. கூ. சங்கத்தின் சேவைகள்"

BEST WISHES FROM

# City Trading Co.,

**Importers, Distributors of Cycle Accessories**
**Hardware Paints & Electrical Goods Etc.**

No. 38, Third Cross Street,

COLOMBO - 11

*Phone:* 25210

BEST WISHES FROM

# The Gulistan Hardware Stores

**Specialist in Weighing & Measuring Instrument**

for 3 Decades

No. 65, Third Cross Street,

COLOMBO - 11

Phone: 20770 Grams: "Zainstan"

மக்கள்

இயக்கத்திற்கு

எமது மகத்தான

நல்வாழ்த்துக்கள்!

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி

[ஏழாலை தெற்கு - மேற்கு கிளை]

சகலவிதமான எமல்சன் பெயின்ட், வாணிஸ், பொலிஸ் முதலியவற்றிற்கும் மற்றும் வீட்டுத் தேவைக்குரிய பூட்டு பிணைச்சல் வகைகளும் பெற்றுக்கொள்ள சிறந்த ஸ்தாபனம்.

கமக்காரருக்குரிய உபகரணங்கள் எப்பொழுதும் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.

தண்ணீர் இறைக்கும் பைப் வகைகள் யாவும் உங்கள் திருப்திக்கு ஏற்ற வகையில் பொருத்திக் கொடுக்கப்படும்.

பிரசித்தி பெற்ற நீர்வேலிப் பூட்டுகள் எம்மிடம் கைவசம் உண்டு.

தங்கள் தேவைக்கு எம்மை நாடுங்கள்

ஈஸ்வரி ஹாட்வெயார் ஸ்டோர்ஸ்

காங்கேசன்துறை வீதி, — சுன்னுகம்

அன்பளிப்பு

**விநாயகர் பிறின்டிங் வேக்ஸ் சப்ளையர்**

ஏழாலை

அன்பளிப்பு

**ரேட்டறி பிறின்ரிங் (T)றேட்ஸ்**

விநியோகஸ்தர்கள்:

தேசிய கடதாசி கூட்டுத்தாபனம்

34, மானிப்பாய் வீதி,

யாழ்ப்பாணம்

கண்ணா புறடக்ஸ் ஸ்தாபனத்தார்
பெருமையுடன் அளிக்கும்

# கண்ணா

தித்திக்கும் பல்சுவையுள்ள ரொபி, இனிப்பு வகைகள்
கண்கவர் வர்ண பொம்மைகள்
வாசனைமிக்க கற்பூரம், ஊதுபத்திகள்.

இன்றே கேட்டு வாங்குங்கள் "கண்ணா" உற்பத்தி வகைகளையே
எங்கும் எப்பொழுதும் கிடைக்கும்.

"கண்ணா" பெயர்தேடும் போட்டியில் ரொக்கப்பரிசு ரூபா 5000/-
கலந்து கொண்டீர்களா? இல்லையேல் இன்றே கலந்து கொள்ளுங்கள்

**கண்ணா புறடக்ஸ்**
**சுன்னாகம்**

* சிங்கம்ஸ் ரல்கம் பவுடர்
* கங்கை ரல்கம் பவுடர்

சகல கூட்டுறவுச் சங்கக் கடைகளிலும்
கிடைக்கும்

தயாரிப்பாளர்கள்

ஆர். கே. எஸ். இன்டஸ்றீஸ்

கோண்டாவில்

## மானிப்பாய் கோவிற்பற்று ப. நோ. கூ. சங்கம்

(வரையுள்ளது)

- கிராமவங்கி
- பிடவை வகைகள்
- பசளை வகைகள்
- லொறிச் சேவைகள்
- நெசவு நிலையங்கள்
- நுகர்ச்சிப் பொருட்கள்
- இரும்பு வகைகள்
- கால்நடைத் தீனிகள்
- எரிபொருள்கள்
- கொப்பி கட்டும் நிலையம்

ஆகியதுறைகளில் 36 கிளை நிலையங்களை உள்ளடக்கிச்
சேவை செய்கின்றது.

" மக்களின் தேவை
மானிப்பாய் கோவிற்பற்று பலநோக்குக்
கூட்டுறவுச் சங்கத்தின் சேவை "

Space Donated by

**JANOORIYAS**

25, A. P. Lane
Moor Street,
JAFFNA

## சிங்கப்பூர் கம்பனி

**The Malayan Trading Co ,**

128, 130 K. K. S. Road
JAFFNA

சகலவித இரும்பு, பித்தளை, சமான்கள்
பல வர்ணமை வகைகள் முதலியன

சகாயமான விலைக்குப்
பெற்றுக் கொள்ளலாம்.

தொலைபேசி: 547

WITH THE COMPLIMENTS OF

The Manufacturers of

ROSE BRAND

SWEETS & TOFFEES

Karuna Trading Centre

(General Merchants)

*Dealers in:*

Aluminium, Brass, Copper wares,
Eversilver & Enamel wares

No. 29, DAM STREET,
COLOMBO - 12

Phone: 35796 Grams: "KARUNA"

கூட்டுறவாளர்களே!

நாட்டுயர்வுக்காக,
தெல்லிப்பழை, மயிலிட்டி, காங்கேசன்துறை
உள்ளூராட்சிமன்றத் தொழிற்பரப்படங்கிலும்
சேவை புரியக் காத்திருக்கின்றது
தெல்லிப்பழை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்.

தங்கள் தேவையைப் பூர்த்தி செய்ய,

நுகர்ச்சிப் பொருட்கள், பிடவைத் தினுசுகள்,
உபகரணங்கள், கிருமிநாசினிகள், கோழித்தீன் வகைகள்,
கட்டடப் பொருள்கள், எரிபொருள் வகைகள்,
பாடசாலைப் புத்தகங்கள், அப்பியாசக் கொப்பிகள்
உபகரணங்கள் ஆகியவற்றை விற்பனை செய்கின்றது.

கிராமிய வங்கி மூலம்,

அடகு பிடித்தல், சேமிப்பைப் பெருக்குதல்,
கடன் வசதி அளித்தல்
ஆகிய தேவைகளைச் செய்கின்றது.
சங்கத்துச் சேவையைப் பெற்று
உங்கள் தேவையைப் பூர்த்திசெய்ய முந்துங்கள்.
பயன் உங்களுக்கே.

தெல்லிப்பழை ப. நோ. கூ. சங்கம்
தெல்லிப்பழை

தொலைபேசி இல:
சுன்னாகம் 343

133015


SPACE DONATED BY

STANLEY HOUSE

95/1, STANLEY ROAD

JAFFNA

Phone: 235



எதிர்பாருங்கள்

"பாலசந்தரின்"

- "அவள் ஒரு தொடர்கதை"
- "நினைத்ததை முடிப்பவன்"
- "தங்கப்பதக்கம்"

இப்பொழுது காண்பிக்கப்படுகிறது

☐ சீர்காழி கோவிந்தராஜன் ☐ T. R. மகாலிங்கம்

— மற்றும் பலர் நடிக்கும் —

" அகத்தியர் "

[வண்ணப்படம்]

நாகம்ஸ் சினிமா ஸ்தாபனத்தார்

சுன்னாகம்

# THE PYRAMID ORGANISATION

Dealers in Hardware - Sanitaryware & Drainage
Stockists of S - Lon & Anton P. V. C. Products
Tools and Implements
Drainage & Plumbing Works Undertaken

340 OLD MOOR STREET — COLOMBO-12

Phone 32076 / 34783

YAGAR
EARLALAI WEST
CHUNNAKAM
LIBRARY

NAGAR
ALAI WEST
CHUNNAKAM
LIBRARY

முருகன் துணை

# P. ALAGUMALAI CHETTIYAR & SONS

GUNNY MERCHANTS

**273, K. K. S. Road — JAFFNA**

**T' Phone: 7443**

**ப. அழகுமலைச் செட்டியார் அன் சன்ஸ்**

சாக்கு வியாபாரம்

**273, கே. கே. எஸ். ரோட் — யாழ்ப்பாணம்**